வாராந்த சஞ்சிகை

# சுடர் ஒளி


நவம்பர் 18 - 24, 2015

பக்கம் 24

விலை 30/-




# புதிய போர்முனை!





ஐக்கிய நாடுகள் சபையின் யாழ். அலுவலகத்துக்கு முன்பாக காணாமற்போனோரின் உறவுகள் கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்தபோது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2700 அடி உயரக்கயிற்றில் நடந்து அசத்திய பெண்





அமெரிக்காவின் டெக்சாஸ் மாநிலத்தைச் சேர்ந்த திகில் சாகச விரும்பிதான் 'ஃபெயித் டிக்கி'. இவரின் வயது26. நிறைய சாகசங்களை செய்து போரடித்ததால் அண்மையில் Highgirls Brazil Festival இல் கலந்து கொண்டார். 2755 அடி உயரத்தில் பிரேசிலின் ரியோ டி ஜெனிரோவில் உள்ள ஹைலைனில் (கயிற்றால் இணைக்கப்பட்டிருக்கும் வழி) 'ஹை ஹீல்ஸ்' அணிந்த காலுடன் நடந்தார்.

கழுத்து வலியையும் பொருட்படுத்தாமல் பிரேசில் மக்கள் ஃபெயித்தை வெகு நேரமாக அண்ணாந்தே பார்த்துக் கொண்டிருந்தார்கள். வெறும் காலுடனே நடக்க தடுமாறும் இந்த இடத்தை ஹை ஹீல்ஸ் காலுடன் கடப்பதென்றால் சும்மாவா.



## கண்ணாடிப் பாலத்தில் யோகா

பலரும் நடக்கவே அஞ்சும் சீனாவிலுள்ள Shiniuzhai National Geological Park இல் அமைக்கப்பட்டுள்ள 590 அடி நீளமான தொங்கும் கண்ணாடிப் பாலத்தில் 100 பெண்கள் சேர்ந்து யோகா செய்து அசத்தியுள்ளனர்.



## நாயாக மாறிய கன்று

அமெரிக்கா கலிபோர்னியா பிராந்தியத்தில் உள்ள, 8 வாரக் கன்றாக சாகயிருந்த கோலியாத் என்ற கன்றுக்குட்டியை ஷாலே ஹப்ஸ் 17 பாடசாலை மாணவி காப்பாற்றியுள்ளார்.

பலவீனமான நிலையில் இருந்த கோலியாத், ஷாலேவின் பாதுகாப்பில் அவளது வீட்டிலேயே வளர்ந்து வருகின்றது. ஷாலே, ஏற்கனவே தனது வீட்டில் 3 நாய்களையும் வளர்த்து வருகின்றார். அந்த நாய்களுடன் சகஜமாகப் பழகிவரும் கோலியாத், அவர்களது உணவை உட்கொள்வதும் அவர்களது பாத்திரத்திலேயே தண்ணீர் அருந்துவதும் என தன்னையும் ஒரு நாய் இனமாகவே நினைத்து வருகின்றது.

சமீபத்தில் ஒருநாள், ஷாலேயின் குடும்பத்தினர் வீட்டில் இல்லாத நேரத்தில், மற்ற நாய்களைப் போல கோலியாத்தும், வீட்டின் சோபாவில் அமர்ந்துகொண்டது.

ஷாலே, கோலியாத் சோபாவில் அமர்ந்திருந்ததைப் புகைப்படம் எடுத்து தனது டுவிட்டர் பக்கத்தில் பகிர்ந்துகொண்டார்.

இப்போது, 50 000 இற்கும் மேற்பட்டோரின் செல்லமாக கோலியாத் மாறிவிட்டது.



## சிங்கம் நாயாக மாறிய விநோதம்

அமெரிக்காவின் விர்ஜினியா விதிகளில் சிங்க குட்டி ஒன்று தெருவில் வருவோர், போவோரை கடிக்க துரத்த குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அலறியடித்து ஓட்டம் பிடிக்க, கடைசியாக வனவிலங்கு பாதுகாவலர்கள் வந்து குட்டி சிங்கத்தை துரத்தி பிடிக்க அது லொள், லொள்,என குரைத்து உள்ளது.சிங்கம் நாயாக மாறிய விநோதத்தை நாம் இப்போது பார்க்கலாம்..

Labradoodle என்னும் நாய் அதிக ரோமங்களை உடலில் கொண்டது .இந்த நாயினை அமெரிக்காவின் விர்ஜினியா வை சேர்ந்த ஒருவர் அதன் ரோமங்களை சிங்கம் போல அதன் முக பகுதியில் அதிக முடிகளுன் பிற பகுதிகளில் முடியை நீக்கி விட்டார் .அந்த சிங்க நாய் தெரு வீதியில் நடமாட அனைவரும் பயந்து வனவிலங்கு பாதுகாவல் துறைக்கு தகவல் குடுத்து உள்ளனர். இறுதியல நாய் என அனைவருக்கும் தெரிய பயந்தவர்கள் நாய் உரிமையாளர் மீது பாயத குறைதான்



## உலகின் உயர்ந்த ராக்கெட் ஏவு தளம்

உலகின் உயர்ந்த ராக்கெட் ஏவு தளம் அமைக்கும் முயற்சியில் கனடா நாட்டின் நிறுவனம் ஒன்று இறங்கியுள்ளது.

அமெரிக்காவின் காப்புரிமையோடு ஒன்டாரியாவை சேர்ந்த தோத் டெக்னாலஜி என்ற நிறுவனம் உலகின் மிக உயரமான ராக்கெட் ஏவுதளத்தை அமைக்க இருக்கிறது. இது தற்போது உலகிலேயே மிக உயரமான கட்டடமாக இருக்கும் துபாய் நாட்டின் புர்ஜ் காலிபா (830 மீ) வை விட 20 மடங்கு உயரமுள்ள டவராக இருக்கும். அதாவது கிட்டதட்ட 17 கி.மீ உயரத்தை கொண்டிருக்கும்.

இதன் மூலம் ராக்கெட்டுகளை விண்ணில் செலுத்தும் போது எரிபொருள் செலவு பெருமளவு குறையும். விண்வெளி வீரர்கள் லிப்ட் மூலமாக அதன் உச்சியை அடைந்து ஆராய்ச்சியை மேற்கொள்ள முடியும். இந்த ராக்கெட் ஏவுதளத்தின் உச்சியில் இருந்து செலுத்தப்படும் ராக்கெட்டுகள் அவற்றின் பணி முடிந்ததும் டவரின் உச்சிக்கே திரும்ப வந்து எரிபொருளை நிரப்பிக் கொள்ள முடியும்.

ராக்கெட்டுகளை ஏவ மட்டுமில்லாமல், காற்றின் மூலம் மின்சார உற்பத்திக்கும், தகவல் தொடர்புக்கும் இந்த ஏவுதளம் உதவியாக இருக்கும் என தோத் நிறுவன தலைமை நிர்வாக அதிகாரி கரோலின் ராபர்ட்ஸ் தெரிவித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- த.கலையரசன்




மத்திய கிழக்கில் வரவிருக்கும் புதிய போருக்கு கட்டியம் கூறியிருக்கிறது பாரிஸ் பயங்கரம். பாரிஸ் நகரில் இனந்தெரியாத ஆயுதபாணிகள், பல இடங்களில் நடத்திய பயங்கரவாத தாக்குதல்களில், 128 பொது மக்கள் கொல்லப் பட்டனர். 13 - 14 நவம்பர் 2015, நள்ளிரவு நடந்த குண்டு வெடிப்பு, துப்பாக்கிச் சூடு காரணமாக, பாரிஸ் நகரம் போர்க்களமாக காட்சியளித்தது.

உதைபந்தாட்ட மைதானத்தில் கிரனேட் வீசப் பட்டது. கம்போடிய ரெஸ்டாரன்ட் ஒன்றில் உணவருந்திக் கொண்டிருந்தவர்கள் மீது, துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் பலர் பலியானார்கள். இசை நிகழ்ச்சி நடந்து கொண்டிருந்த அரங்கு ஒன்றில் இருந்த பார்வையாளர்கள்தான் பெருமளவில் பலியாகி உள்ளனர்.

இசை நிகழ்ச்சி நடந்த அரங்கிற்குள் நுழைந்த ஆயுதபாணிகளை, நேரில் கண்ட சாட்சிகள் பல உள்ளன. முகத்தை முழுவதுமாக மூடிக் கொண்டு, கருப்பு உடையணிந்து, ஏ.கே-47 தா்னியங்கி துப்பாக்கிகளால் பதற்றப் படாமல், ஆறுதலாக சுட்டுத் தள்ளிக் கொண்டிருந்தார்கள். இடையிடையே மூன்று, நான்கு தடவைகள் ரவைக் கூடுகளை மாற்றினார்கள். நிலத்தில் படுத்திருந்த பார்வையாளர்களை, குருவி சுடுவது போன்று சுட்டுக் கொன்றனர். தாக்குதல் நடந்த நேரத்தில், ஆயுதபாணிகள் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை!

அதிகாலை வரையில், பிரெஞ்சு ஊடகங்கள், தாக்குதல் நடத்தியவர்களை பெயர் குறிப்பிட்டு சொல்லவில்லை.

இனந்தெரியாத ஆயுதபாணிகள் என்றே பிற ஐரோப்பிய ஊடகங்களும் தெரிவித்தன. இதற்கிடையே, ஐரோப்பிய தீவிர வலதுசாரிகள் சிலர், வழமை போல தமது இஸ்லாமிய விரோத பிரசாரத்தை முடுக்கி விட்டனர்.

வழமை போலவே, சில தமிழ் வலதுசாரிகளும் ஐரோப்பிய நிறவெறியர்களின் பிரசாரத்தை உள்வாங்கிக் கொண்டனர். அடுப்பு சட்டியைப் பார்த்து கருப்பென்று சொன்ன கதை இது. ஐரோப்பிய நிறவெறியர்கள் (தீவிர வலதுசாரிகள்), இஸ்லாமியருக்கு எதிராக மட்டுமல்ல, ஒட்டு மொத்த அகதிகளுக்கும் எதிராக பிரச்சாரம் செய்து கொண்டிருக்கிறார்கள். பல மேற்கு ஐரோப்பிய நாடுகளில், அகதி முகாம்களுக்கு பலத்த பொலிஸ் காவல் போடப் பட்டுள்ளது.

பாரிஸ் தாக்குதலுக்கு முன்தினம், லெபனான், பெய்ரூட் நகரில் ஐ.எஸ் அமைப்பு நடத்திய குண்டுத்தாக்குதலில், நாற்பது இஸ்லாமியர்கள் கொல்லப் பட்டனர். கடந்த ஐந்து வருடங்களாக நடக்கும் சிரியப் போரில், ஐ.எஸ். பயங்கரவாதி களால் ஆயிரக் கணக்கான இஸ்லாமியர்கள் கொல்லப் பட்டனர் என்பதையும் இந்த இடத்தில் குறிப்பிட வேண்டும்.

பாரிஸ் தாக்குதல் நடந்து பல மணி நேரமாகியும், யாரும் உரிமை கோரவில்லை. சமூக வலைத்தளத்தில் ஐ.எஸ் அமைப்பு உரிமை கோரியிருப்பதாக, அறிவித்தார்கள். அதற்குப் பின்னர், சில நிமிடங்கள் கூடத் தாமதிக்காமல், பிரெஞ்சு அதிபர் ஹோலந்த் இது ஒரு போர்ப் பிரகடனம் என்று அறிவித்தார். ஐ.எஸ் அமைப்பு கூட, பாரிஸ் தாக்குதலானது பிரான்ஸ் மீதான போர் என்று தான் அறிவித்திருந்தது. அதாவது, இரண்டு தரப்பினரும், வரிந்து கட்டிக் கொண்டு போரில் குதிக்கப் போகிறார்கள்.

சமீப காலமாக, ரஷ்யா தான் தனது பிரதான எதிரி என்று ஐ.எஸ் அமைப்பு அறிவித்திருந்தது. எகிப்து, சினாய் பகுதியில் ரஷ்ய விமானம் விழுந்து நொறுங்கியதற்கும், தாமே சுட்டு வீழ்த்தியதாக ஐ.எஸ் அமைப்பு உரிமை கோரியது. அப்போது விமானத்தில் குண்டு வைக்கப் பட்டிருந்ததற்கான ஆதாரம் இருப்பதாக.... பயமுறுத்திய மேற்குலக அரசுகள், தமது சுற்றுலா பயணிகள் எகிப்திற்கு செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தின.

ரஷ்ய விமானத்தில் குண்டு இருந்தது தெரியும் என்று சொல்லிக் கொண்டிருந்த, அமெரிக்காவும், பிரிட்டனும், ஐ.எஸ் அமைப்புநடத்திய பயங்கரவாத தாக்குதலை கண்டிக்கவில்லை! இருநூறுக்கும் அதிகமான பயணிகள் பலியான போதிலும், எந்த நாடும் போர்ப் பிரகடனம் செய்யவில்லை. (ஏற்கனவே நடந்து கொண்டிருக்கும் ரஷ்யாவின் போர் நடவடிக்கைகளை பிரான்ஸ், அமெரிக்கா ஆதரிக்கவுமில்லை.)

**இப்பேரது எதற்காக ஒரு புதிய போர்?**

சிரியாவில் நடக்கும் உள்நாட்டுப் போரில் ஐ.எஸ் அமைப்பு தனது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களை இழந்து கொண்டிருக்கிறது. வாரக் கணக்காக நடந்து கொண்டிருக்கும் ரஷ்ய விமானக் குண்டுத் தாக்குதல்களால், ஐ.எஸ் அமைப்பு நிலைகுலைந்து போயுள்ளது. ஐ.எஸ் அமைப்பு நிர்வகிக்கும், நடைமுறை இஸ்லாமிய தேசத்தின் மேற்குப் பகுதிகளை சிரிய இராணுவம் கைப்பற்றியுள்ளது.

பாரிஸ் தாக்குதல் நடப்பதற்கு முன்தினம் தான், ஈராக்கில் உள்ள சிஞ்சார் மலைப் பிரதேசத்தை கைப்பற்றியுள்ளதாக, ஈராக்-



குர்திஸ்தான் படையணிகள் அறிவித்தன. சிரியா - ஈராக் எல்லையேரரம் அமைந்துள்ள சிஞ்சார் பகுதி கேந்திர முக்கியத்துவம் வாய்ந்தது. குர்திய படைகள் அதைக் கைப்பற்றியதன் மூலம்,ஐ.எஸ் அமைப்புகட்டுப் பாட்டுப் பிரதேசத்தின் நடுவில் ஊடுருவி உள்ளது. மேலும், அடுத்ததாக எண்ணை வளம் நிறைந்த மொசுல் நகரை கைப்பற்றப் போவதாக, குர்திய படைகள் அறிவித்தன.

முன்னர் எப்போதும் இல்லாதவாறு, ஐ.எஸ் அமைப்பு பலவீனமடைந்துள்ள நிலையில், இப்போது எதற்காக ஒரு புதிய போர்?

ஐ.எஸ் அமைப்பு தனது பிரதான எதிரிகளான ரஷ்யா, ஈரான் போன்ற நாடுகளை விட்டு விட்டு, எதற்காக பிரான்ஸ் மீது போர்ப் பிரகடனம் செய்ய வேண்டும்? அமெரிக்கா, இஸ்ரேல் போன்ற மேற்குலக நாடுகளால் உருவாக்கப் பட்ட இயக்கம் தான் ஐ.எஸ் அமைப்பு. இதற்கான ஆதாரங்களை ஏற்கனவே பலர் எடுத்துக் காட்டி விட்டார்கள். விக்கிலீக்ஸ் கூட அது சம்பந்த மான இரகசிய ஆவணங்களை பிரசுரித்திருந்தது. மேற்குலகு ஐ.எஸ் அமைப்பு என்ற பூதத்தை எந்த நோக்கத்திற்காக உருவாக்கியதோ, அது நிறைவேறாமல் போய்விடும் என்ற அச்சம் தற்போது ஏற்பட்டுள்ளது.

உண்மையில், மத்திய கிழக்கில் உள்ள அரபு நாடுகள் யாவும், ஐரோப்பிய காலனிய எஜமானர்களின் படைப்புகள் ஆகும். பிரிட்டிஷ் காலனி ஈராக் என்றும், பிரெஞ்சுக் காலனி சிரியா (மற்றும் லெபனான்) என்றும் பிரிந்தன. அதை நினைவுபடுத்தும் வகையில் தான் ஐ.எஸ் அமைப்பு தனது இயக்கத்திற்கு பெயரிட்டுக் கொண்டது.

தற்போது, சிரியாவையும், ஈராக்கையும், மீண்டும் பிரிப்பதற் கான திட்டம் மேற்குலக கொள்கை வகுப்பாளரிடம் உள்ளது. காலனிய கால பிரித்தாளும் தந்திரம் மீண்டும் அரங்கேறுகின்றது. ஐ.எஸ் அமைப்பு தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் பிரதேசம் இஸ்லாமிய தேசம் என்று அழைக்கப் படுகின்றது என்பது எல்லோருக்கும் தெரியும்.

ஆனால், பலர் அறியாத ஓர் உண்மை இருக்கிறது.

சிரியாவின் மேற்குப் பகுதியும், தெற்குப் பகுதியும் அசாத் அரசின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது. அங்கே ஷியா அல்லது அலாவி இஸ்லாமியர்கள் பெரும்பான்மை யாக உள்ளனர். அவர்களுடன் கிறிஸ்தவ சிறுபான்மையினரும் அசாத் அரசை ஆதரிக்கின்றனர்.

(22 ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கிரீடத்தை இழக்கும் கிரீஸ் 12

ஜி.எஸ்.எஸ்.

புரட்சி இராணுவத்துக்குத் தலைமை தாங்கியவர் டெமெட்ரியோஸ் என்பவர். மக்கள் இதற்கு சிறிய அளவில் கூட எதிர்ப்பு தெரிவிக்கவில்லை என்றால் அதற்கு வேறொரு காரணமும் இருந்தது. அதற்குப் பத்து நாட்களுக்கு முன்புதான் இந்த ஆட்சிக்கு மாணவர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். இந்தக் கலவரத்தில் பொது மக்களில் சிலர் இறக்க, நூற்றுக்கணக்கானவர்கள் படுகாயத்துக்கு உள்ளானார்கள்.

லெப்டினன்ட் ஜெனரல் ஃபேடோன் கிஜிகிஸ் என்பவர் இராணுவத்தால் கிரீஸ் நாட்டின் தலைவராக நியமிக்கப்பட்டார்.

இதைத் தொடர்ந்து தகவல் தொடர்பு சிதைக்கப்பட்டது. தொலைபேசி சேவைகள் துண்டிக்கப்பட்டன. ஒரு நாள் முழுவதும் ஏதென்ஸ் சர்வதேச விமான நிலையமும் மூடப்பட்டது.

நாட்டுத் தலைவரான டெமெட்ரியோஸ் தன்னிடம் அதிக அதிகாரங்களைக் குவித்துக் கொண்டார். 1974இல் இவரது ஆட்சியும் கலைக்கப்பட்டது. இந்த முறை துருக்கியர்கள் கிரீஸை கைப்பற்றியிருந்தனர். டெமெட்ரியோஸ் மீது தேச துரோக குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு அவருக்கு ஆயுள் தண்டனை வழங்கப்பட்டது.

கிரீஸைத் தனது நாட்டுடன் இணைத்து இத்தாலியின் பரப்பை அதிகரிக்க வேண்டும் என்று முசோலினி தீர்மானித்துச் செயல்படுத்தத் தொடங்கினார். இந்தத் தாக்குதல் அல்பேனியா - கிரீஸ் பகுதியில் நடைபெற்றது. முசோலினி வேறொரு உத்தியையும் பயன்படுத்தினார்.

கிரேக்க இராணுவத்தின் கவனம் அல்பேனிய எல்லையில் இருக்க, அப்போது வடக்கு கிரீஸில் இத்தாலிய இராணுவத்தின் மற்றொரு பகுதி தாக்குதல் நடத்தியது.

ஆனால் பலரும் எதிர்பாராதபடி இத்தாலியப் படையெடுப்பை தடுத்து நிறுத்தியதோடு எதிர்த் தாக்குதலையும் கச்சிதமாகச் செய்தது கிரீஸ்.

1941 மார்ச் மாதத்தில் நடைபெற்ற இத்தாலியின் தாக்குதலை அடுத்த பத்தே நாட்களுக்குள் கிரீஸ் முறியடித்தது. முசோலினியின் போர் வியூகங்களுக்கு அடி மேல் அடி. பிறகு ஹிட்லரின் உதவியை நாடினார் முசோலினி. ஜெர்மனி இராணுவம் கிரீஸ்மீது படையெடுத்தது.

ஜெர்மனியுடனும் கிரீஸ் தொடர்ந்து போரிட்டது. என்றாலும் ஒரு கட்டத்தில் தனக்குப் பல விதங்களில் போரினால் உண்டாகிக் கொண்டிருக்கும் நஷ்டங்களை உணர்ந்த கிரீஸ் அமைதி ஒப்பந்தத்துக்கு ஒப்புக் கொண்டது. முதலில் ஜெர்மனிக்கும், கிரீஸுக்கும் அமைதி உடன்படிக்கை ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து இத்தாலியுடனும் அமைதி உடன்படிக்கையில் கையெழுத்திட்டது கிரீஸ்.

ஆனால் இந்த உடன்படிக்கை மிகவும் ஒருதலைபட்சமாக இருந்தது. அச்சு நாடுகள் கிரீஸை




ஆக்கிரமிக்கத் தொடங்கின. இத்தாலிய, ஜெர்மானிய, பல்கேரியப் படைகள் ஒரு சேர கிரீஸுக்குள் நுழைந்தன. பேராசை சற்றும் குறையாத இத்தாலி இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு கிரீஸில் மூன்றில் இருபங்கு பரப்பை ஆக்கிரமித்தது.

தொடரும் கிரீஸின் வரலாற்றில் நிகழ்ந்த மேலும் சில முக்கிய சம்பவங்களைப் பார்ப்போம்.

1941இல் இராணுவத் தளபதி மெடக்சாஸ் இறந்துவிட, கிரீஸ் பலவீனமடைந்தது. ஜெர்மனி கிரீஸை முழுமையாக ஆக்கிரமித்தது. அதே ஆண்டு ஏற்பட்ட பஞ்சத்தில் சுமார் ஒரு லட்சம் பேர் கிரீஸில் இறந்தனர்.

அதற்கு மூன்று வருடங்கள் கழித்து பிரிட்டனின் உதவியைக் கோரியது கிரீஸ். பிரிட்டனும் கைகொடுத்தது. தனது இராணுவத்தை கிரீஸுக்கு அனுப்பியது. அந்த இராணுவத்துடன் இணைந்து நாஜிக்களை தனது எல்லையிலிருந்து வெளியேற்றியது கிரீஸ்.

1952ல் புதிய அரசியலமைப்புச் சட்டம் கிரீஸில் அறிமுகமானது. இதன்படி கிரீஸ் ஒரு ராஜாங்கம். எனினும் நாடாளுமன்ற ஜனநாயகத்தின்படி அது ஆட்சி செய்யும். இதைத் தொடர்ந்து நேட்டோ எனப்படும் வடஅட்லாண்டிக் நாடுகள் கூட்டமைப்பிலும் உறுப்பினரானது கிரீஸ்.

அடுத்த முக்கிய நிகழ்வு என்று 1973 இல் நிகழ்ந்ததைக் கூறலாம்.

ஜார்ஜ் பபடோபவுலஸ் என்பவர் அப்போது கிரீஸ் நாட்டின் அதிபராக விளங்கினார். ஒரு காலத்தில் அவரே அந்த நாட்டின் இராணுவ அதிகாரியாக இருந்து ஆட்சியைக் கைப்பற்றியவர்தான். அதிபரான பிறகும் இராணுவ அதிகாரத்தை அவரால் விட முடியவில்லை மூலம் அதீத அடக்குமுறை, சர்வாதிகாரம். மக்களின் பெரும் வெறுப்பைச் சம்பாதித்திருந்தார்.

(வளரும்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# குள்ளர்களின் கிராமம்

சீனாவின் தென்மேற்கு பகுதியில் அமைந்துள்ள யாங்சி (Yangsi) என்ற கிராமத்தில் உள்ள 40 சதவிகித மக்கள் குள்ளர்களாகவே உள்ளனர்.

பல்லாண்டுகளாக அந்த கிராமத்தில் குள்ளர்களின் எண்ணிக்கை அதிகரித்த படியே உள்ளதால், விஞ்ஞானிகள் அதற்கான காரணம் என்னவென்று அறியாமல் குழப்பமடைந்துள்ளனர்.

குள்ளர்களின் கிராமம் என்றழைக்கப்படும் அந்த கிராமத்தில் பிறக்கும் குழந்தைகளில் பெரும்பாலானவர்களுக்கு 5 முதல் 7 வயது ஆகும் நேரத்தில் இந்த பாதிப்பு ஏற்படுகிறது.

சுமார் 60 ஆண்டு காலமாக அந்த கிராமத்தில் இந்த வினோதம் நடந்து வருகிறது.

அந்த கிராமத்தில் உள்ள மக்களில் அதிக உயரமே 3 அடி தான் என்றும், குறைந்த உயரம் 2 அடி என்றும் கூறப்படுகிறது.

அந்த கிராமத்தில் உள்ள முதியவர்கள் இதுபற்றி கூறுகையில், பல ஆண்டுகளுக்கு முன்பு கோடை கால இரவு ஒன்றில் ஒரு கொடிய நோய் அந்த கிராமத்தை தாக்கியதால் தான் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

மேலும் இந்த கிராமத்தில் உள்ளவர்கள் உயரக் குறைபாடு மட்டுமல்லாமல் இன்னும் சில உடல் குறைபாடுகளாலும் அவதிப்படு வருகின்றனர்.

அறிவியல் விஞ்ஞானிகள் இந்தக் கிராமத்தில் உள்ள நீர், நிலம், மணல் மற்றும் உணவு தானியங்களை ஆய்வு செய்ய சென்று வருகின்றனர்.

ஆனாலும் அவர்களால் அந்த கிராமத்தினர் குள்ளமாக இருப்பதன் காரணத்தை அறிவியல் பூர்வமாக விளக்க முடியவில்லை.

அதிகாரிகள் இதுபற்றி கூறுகையில், இந்த கிராமத்தில் 1951ம் ஆண்டு முதல் தான் இந்த குறைபாடு தொடங்கியிருக்க வேண்டும்.

அதிகார பூர்வமாக 1951ஆம் ஆண்டு தான் குள்ளர்கள் இருந்ததாக கருதப்பட்டாலும், 1911ஆம் ஆண்டிலேயே குள்ளர்கள் நிறைந்த கிராமம் இருந்ததாக சில வெளிநாட்டவர்கள் கூறுகின்றனர்.

இவ்வாறு பல கதைகளும் காரணங்களும் கூறப்பட்டாலும் இதற்கான அதிகாரப்பூர்வ அறிவியல் காரணம் இன்றுவரை தெரியவில்லை.

இந்நிலையில் தற்போது அங்கு பிறக்கும் குழந்தைகள் இந்த குறைப்பாட்டால் பாதிக்கப்படுவது பெருமளவில் குறைந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.



# ஏரியில் செயற்கைத்தீவு

ஸ்டீன்ஹுடெர் மீர் அல்லது ஏரி ஸ்டீன்ஹுட் என்று அழைக்கப்படும் இந்த ஏரி தீவு எல்லோரையும் கவரக்கூடியது.

சுற்றிலும் நீர் சூழ்ந்த ஒரு இயற்கை நிலப்பரப்பான தீவு என்ற அமைப்பே மிகவும் சுவாரஸ்யமானது.

ஒரு தீவில் இருப்பது பிடித்தமான தனிமை, அது இனிய இயற்கையின் துணை உணர்வுதான்.

அதிலும் தீவுக்குள் செழிப்பான பசுமையும் நேர்த்தியான நில அமைப்புடைய தூய வன அழகும் கொலுவிருந்தால், உள்ளத்தில் குதூகலிக்கும் மகிழ்ச்சியை அளவிட முடியாது.

ஆனால், புதிய ஆச்சரியமான அனுபவத்தை ஏற்படுத்துவது, இந்த 'வில்ஹெல்ம்ஸ்டீன்' தீவு செயற்கையாக வடிவமைக்கப்பட்டதுதான்.

இதனோடு 'பாதின்செல்' என்ற இன்னொரு தீவும் உள்ளது. இந்த தீவுகளின் மொத்த நீளம் 8 கி.மீ. அகலம் 4.5 கி.மீ. மட்டுமே.

வடமேற்கு ஜேர்மனியிலிருந்து 30 கி.மீ. தூரத்தில் உள்ள ஹனோவரில் அமைந்துள்ளது. இந்த ஏரி 30 கி.மீ. பரப்பளவு கொண்டது. 'ஸ்டீன்ஹுட்' என்ற கிராமத்தின் பெயரிலேயே தீவும் அழைக்கப்படுகிறது.

அந்த ஏரியின் நடுவில் சதுர வடி விலான நிலப்பரப்பை ஏற்படுத்தி கண்கவர் தீவாக உருவாக்கும் முயற்சி 18ஆம் நூற்றாண்டிலேயே தொடங்கியது.

இந்த ஏரியின் ஆழம் மிகக்குறைவு, 1.35 மீற்றர் சராசரியானது. அதிகப்படியான ஆழமே 3 மீற்றருக்கும் குறைவுதான். தீவு அமைக்கும் முயற்சி வெற்றியடைய இதன் ஆழமின்மையும் ஒரு காரணம்.

ஷாம்பர்க்-லிப்பேவின் பிரபுவாக இருந்த வில்லியம் என்பவருக்கு யாரும் நுழைய முடியாத ஒரு பாதுகாப்பான இராணுவகோட்டை அமைக்க விருப்பம்.



அதற்கு சரியான இடமாக இந்த ஏரியைத் தேர்வு செய்தார். இந்த தீவின் அடித்தளம் கற் குவியலை கொண்டது.

அங்கு வசித்த மீனவர்களின் உதவியுடன் அவர்களுடைய இரண்டு படகுகளில் தீவு அமைப்பதற்கான கற்கள் முதலான சகல பொருள்களும் ஏற்றிச்செல்லப்பட்டது. இது 1765 முதல் 1767 ஆம் ஆண்டு வரை நடந்தது.

முதன்முதலாக 1772 ஆம் ஆண்டில் ஸ்டீன் ஹுடெர் ஹெட்ச் என்ற ஜேர்மனியின் நீர்மூழ்கி கப்பல் இங்கு உருவாக்கப்பட்டது.

உயரத்தில் இருந்து பார்க்க பிறந்தநாள் கேக் போல காட்சியளிக்கும் இந்த தீவு, பார்வையாளர்களை கவரும் ஜேர்மனியின் மிகச்சிறந்த சுற்றுலா தலங்களில் ஒன்றாக விளங்குகிறது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடர் ஒளி

வாராந்த சஞ்சிகை

sudarolijaffna@gmail.com

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 021 492 7419


## சீனி உட்கொள்வதைக் குறைத்து சிறுநீரக நோயிலிருந்து தப்புங்கள்

தேநீரில் சீனி கலந்து விற்பனை செய்வதற்கு அரசு தடை விதித்துள்ளது.

தேநீர்ச்சாலைகள், சிற்றுண்டிச் சாலைகள், ஹோட்டல்கள் இனிமேல், தேநீரை தனியாகவும், சீனியைத் தனியாகவும் பரிமாற வேண்டும். தேநீர் அருந்துபவர்கள், தமக்கு அளவான குறைந்தளவு சீனியை தேநீரில் இட்டுக் குடிக்கலாம்.

சுகாதார அமைச்சு இதற்கான விசேட சுற்றுநிருப்த்தை, உலக சிறுநீரக நோயாளர் தினமான நவம்பர் பதினான்காம் திகதியன்று வெளியிட்டிருந்தது.

சீனி வெள்ளை நிற நஞ்சு என்று ஆய்வாளர்கள் சொல்கிறார்கள். கனதியான காரணங்களுடன் சுட்டிக்காட்டுகிறார்கள்.

உணவுக்கட்டுப்பாடு இன்றி, நோய்களை விலை கொடுத்து வாங்குவதில் எம்மவர்கள் "பலே கெட்டிக் காரர்கள்". பெற்றோரும் மற்றோரும், பிள்ளைகளுக்கு சிறுபராயம் தொட்டு சீனியை, அதிக அளவில் அள்ளிப் போட்டு தேநீர் குடிக்கப் பழக்கி விடுகிறார்கள்.

சீனியை அதிக அளவில் உட்கொள்வதால் உண்டாகும் - பின்னர் வரும் - கெடுதிகளை தெரியாதவர்களாக "செல்லமாக" வளர்ப்பது வழமையாகிவிட்டது.

அந்த வகையில், சுகாதார அமைச்சின் புதிய ஏற்பாடு சமயோசிதமானதும், மிகவும் வரவேற்கத்தக்கதும் ஆகும்.

உலகளாவிய மட்டத்தில் ஆண்டு ஒன்றுக்கு ஐம்பது இலட்சம் மக்கள் சிறுநீரக நோய்க்குப் பலியாகிறார்கள். இந்தத் (திடுக்கிடும்) கவலை வெளியிட்டிருக்கிறார், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் நீரிழிவு விசேட வைத்திய நிபுணர் தர்சினி கருப்பையாப்பிள்ளை.

சீனியை அதிகம் உள்ளெடுப்பதால் உண்டாகும் ஆபத்துக்கள் குறித்துப் பரந்த அளவில் பரப்புரை செய்ய வேண்டிய தேவை இப்போது அதிகரித்துள்ளது.

பக்க விளைவு குறைந்த பனஞ்சீனியை, மக்கள் பயன்படுத்தத் தூண்ட வேண்டிய தேவை உயர்ந்து வருகிறது. அதன் உற்பத்தியைப் பெருக்குவதற்கான வழிமுறைகளை பனை அபிவிருத்திச் சபையினர் முன்னெடுக்க வேண்டும். எமது பேரன் பேர்த்தி காலத்தில், பனங்கட்டி, பனம் கற்காரம் போன்றனவே பிரதான இனிப்புப் பண்டங்களாக உயர்ந்து நின்றன.

அந்த நிலை மீண்டும் தட்டி எழுப்பப்பட வேண்டும். அதனால் ஒரே நேரத்தில் இரட்டை நலன்கள் விளையும். அவற்றில் முதலாவது, சீனியை உட்கொள்வதால் "பரவி" வரும் நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்த இயலும் என்பது முதலாவது.

ஆகையால், பனைச் செய்கையை ஊக்கப்படுத்தி, முந்தைய காலங்களைப் போன்று அந்தக் கற்பக தருவின் சத்துணவான பனம்பழ 'உற்பத்தியைப் பெருக்க வாய்ப்பு உண்டாகும். அது எமது பிராந்தியத்தின் பொருளாதார வளர்ச்சிக்கும் பெரிய அளவில் வலுவூட்டும்.

அதனை இலக்காக வைத்து, பனைச் செய்கையை வடக்கில் பெரிய அளவில் மேற்கொள்ளவும், பொருளாதாரத்தைப் பெருக்கவும் என இரட்டை நலன்களை - ஒரே கல்லில் இரண்டு மாங்காய்கள்- என்ற நிலையைப் பெருக்கலாம். பலருக்குத் தொழில் வாய்ப்பை உண்டாக்கவும் சாத்தியமாகும்.

எந்த நோயையும் வருமுன் காப்பதன் மூலமே மக்களைக் காப்பாற்றலாம்.

## மியன்மாரில் ஆட்சி மாற்றம்

சீனாவின் பிடியில் இருந்து இன்னும் ஒரு நாடு ஆட்சிய மாற்றம் என்னும் பெயரில் மீட்கப்படுகின்றது. கொதிக்கும் எண்ணெயில் இருந்து விடுபட்டு எரியும் நெருப்புக்குள் இன்னும் ஒரு நாடு விழுகின்றதா? இலங்கையில் நடந்த ஆட்சி மாற்றத்திற்கும் மியன்மாரில் நடக்கும் ஆட்சி மாற்றத்திற்கும் பல ஒற்றுமைகள் உண்டு.' மியன்மாரிலும் சீனா முதலீடுகள் செய்ததுண்டு. சரியாகச் சொன்னால் நாட்டுக்குப் பயன்தராத முதலீடுகள். மியன்மாரிலும் சீனாவின் முத்து மாலைத் திட்டத்தில் ஓர் அம்சமாக சிட்வே துறைமுகம் மேம்படுத்தப்பட்டுள்ளது. மியன்மார் சீனாவின் strategic corridor into the Indian Ocean.



### கேந்திர முக்கியத்துவம்

பர்மா என முன்னர் அழைக்கப்பட்ட மியன்மார், ஐந்து கோடியே இரண்டு இலட்சம் (52 மில்லியன்) மக்களைக் கொண்டது. கனிம வளம் மிக்க மியன்மார் சீனா, இந்தியா, பங்களாதேசம், லாவோஸ், தாய்லாந்து ஆகிய நாடுகளுடன் எல்லைகளைக் கொண்டது. இந்துமா கடலின் வங்காள விரிகுடாவை மேற்கு எல்லைகளாகக் கொண்டது. உலகிலேயே அதிக அளவு மக்கள் தொகையைக் கொண்ட இந்தியாவிற்கும் சீனாவிற்கும் இடையில் மியன்மார் இருக்கின்றது. அதன் அரசியலமைப்பின் படி வெளிநாட்டுக் கடவுச் சீட்டுக்களைக் கொண்ட இரு மகன்களைக் கொண்ட ஆங் சூ கீ அதன் தலைவராக முடியாது. அந்த அரசியலமைப்பை மாற்ற 75 வீதத்துக்கும் மேலான ஆதரவு அவசியம். 1990ஆம் ஆண்டு தேர்தலில் வெற்றியீட்டிய ஆங் சூ கீயை ஆட்சியமைக்க விடாமல் சிறையில் அடைத்தனர் மியன்மாரின் ஜுண்டா எனப்படும் ஆட்சியாளர்கள். ஆங் சூ கீயின் வலதுகரமாகத் திகழ்பவர் வின் தீன் என்னும் ஒரு முன்னாள் படைத்துறை அதிகாரி. இவர் படைத்துறையில் இருந்து விலகி பல பல்தேசிய நிறுவனங்களுக்கு இரகசியத் தரகராகச் செயற்பட்டதன் மூலம் பெரும் பொருள் ஈட்டியவர். படைத்துறையைச் சேர்ந்தவர்களுக்கு சிகரட் பெட்டியும் விஸ்க்கிப் போத்தலும் கொடுத்து தனக்கு வேண்டியதைச் சாதித்துக் கொண்டவர். இந்தப் பல்தேசிய நிறுவனங்களுடனான தொடர்பு அவரை பன்னாட்டுச் சமூகம் என்றும் அரச சார்ப்பற்ற தொண்டு நிறுவனங்கள் என்றும் பல உளவுத் துறைகளுடன் தொடர்புகளை ஏற்படுத்த வாய்ப்புக் கொடுத்திருக்கலாம். அதுவே அவரை ஆங் சூ சீயின் வலது கரமாக்கியும் இருக்கலாம்.

மியன்மாரின் நாடாளுமன்றம் 224 உறுப்பினர்களைக் கொண்ட மேலவையையும் 440 உறுப்பினர் களைக் கொண்ட மக்களவையையும் கொண்டது. இரண்டிற்குமான தேர்தல் 2015 நவம்பர் 7ஆம் திகதி நடைபெற்றது. மக்களவையின் 440 உறுப்பினர்களில் 110 பேரை படைத்துறையின் நியமிப்பர் எஞ்சிய 330 உறுப்பினர் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படுவர்.

### ஒரு குட்டை ஒரே மட்டைகள்

இலங்கையில் உள்ள பௌத்த தீவிரவாத அமைப்புக்களுக்கும் பர்மாவில் உள்ள பௌத்த தீவிரவாத அமைப்புக்களுக்கும் இடையில் தொடர்பு உண்டு எனக்கூறப்படுகிறது. இரு நாட்டிலும் உள்ள பௌத்த தீவிரவாத அமைப்புக்களுக்கும் நோர்வே, மோஸாட், சி ஐ ஏ ஆகியவற்றுடன் தொடர்பு உண்டு எனக் குற்றம் சாட்டப்படுவதும் உண்டு. நாட்டில் மக்கள் மத்தியில் தனது செல்வாக்கைக் குறைக்க பௌத்த தீவிரவாத அமைப்புக்கள் ஐக்கிய அமெரிக்காவுடன் இணைந்து செயற்பட்டதாக மஹிந்த ராஜபக்ஷ குற்றம் சாட்டியிருந்தார். ஆனாலும் சில வேறுபாடுகளும் உண்டு. மஹிந்த ராஜபக்ஷ போல் பர்மாவின் படைத்துறை ஆட்சித் தலைவர் தெயின் செயின் முரண்டு பிடிக்கவில்லை. அமெரிக்காவின் சொற்படி கேட்கத் தொடங்கினார். அதனால் அவருக்கு எதிராக ஜெனிவா மனித உரிமைக்கழகத்தின் தீர்மானங்கள் நிறைவேற்றப்படவில்லை. பக்கத்து நாட்டில் இருந்து படைகள் வந்து இறங்கும் என்ற மிரட்டலும் விடத்தேவையில்லாத ஒரு நிலைமை ஏற்பட்டது. இப்படி தெயின் செயின் வளைந்து கொடுத்ததால் அவரை வெள்ளை மாளிகைக்கு அழைத்து




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருந்தும் கொடுக்கப்பட்டது.

**ஆட்சி மாற்றமும் இனக்கொலையும்**


ஒரு நாட்டில் இனக்கொலை நடந்தால் அங்கு ஆட்சி மாற்றம் ஏற்பட வேண்டும் என்பதை நாம் எல்லோரும் அறிவோம். ஆனால் ஒரு நாட்டில் ஆட்சி



மாற்றம் ஏற்பட வேண்டும் என்றால் அங்கு இனக்கொலை நடக்குமா என்பதை ஒரு கேள்விக்குறியாக்கியுள்ளது மியன்மார் எனப்படும் பர்மாவில் நடப்பவை. மியன்மாரில் சீனாவும் அமெரிக்காவும் பெரும் ஆதிக்கப் போட்டியில் ஈடுபட்டுள்ளன. இலங்கையைப் போல பர்மாவிலும் தேரவாத பௌத்த மதம் அங்குள்ள மக்களில் பெரும்பான்மையோரால் கடைப்பிடிக்கப்படுகின்றது. அது மட்டுமல்ல இலங்கையில் மஹாவம்சம் போல் பர்மிய பௌத்தர்கள் சாஸன வம்சம் என்னும் வரலாற்று நூலை எழுதியுள்ளார்கள். வெளியாரின் நிர்ப்பந்தங்களாலும் இயக்கத்திலும் அமைதியான தேர்தல் இலங்கையைப் போலவே மியன்மாரிலும் நடந்துள்ளது.

**சீன முதலீடு**

சீனாவிற்கான எரிபொருள் இறக்குமதி யில் பேரும் பகுதி மலேசியாவை ஒட்டியுள்ள மலாக்கா நீரிணையூடாக நடைபெறுகின்றது. உலக வர்த்தகத்தின் முக்கிய திருகுப் புள்ளிகளில் (choking points) ஒன்றான மலாக்கா நீரிணையில் வைத்து சீனாவிற்கான எரிபொருள் விநியோகத்தையும் சீனாவின் ஏற்றுமதியையும் தடை செய்ய முடியும். இதற்கு மாற்றீடாக பர்மாவினூடாக தனக்கு ஒரு விநியோகப் பாதையை சீனா உருவாக்கியது. இந்தப் பாதை சீனாவின் யுனன் மாகாணத்தில் ஆரம்பித்து பர்மாவின் இரவாடி நதியூடாகச் சென்று பர்மாவின் தலைநகர் சென்று பின்னர் இந்துமாகடலை அடைகின்றது. இது மட்டுமல்ல சீனாவின் முத்து மாலைத் திட்டம் பர்மாவின் சிட்வே துறைமுகத்தில் இருந்து ஆரம்பிக்கின்றது. பர்மாவின் கனிம வளங்களும் வெளிநாட்டுக் கொள்கையும் சீனாவின் கரங்களிலேயே இருந்தன என விமர்சிப்பதுண்டு. பர்மாவின் கனிம வளங்களை அகழ்வு செய்யும் உரிமத்தையும் இராவாடி நதியில் இருந்து மின் உற்பத்தி செய்யும் உரிமையையும் சீனா தனதாக்கிக் கொண்டது. 2007 ஆம் ஆண்டு பர்மாவின் கடலில் இயற்கைவாயு ஆய்விற்கான ஒப்பந்தத்தையும் பர்மாவுடன் செய்து கொண்டது. 2009ஆம் ஆண்டு 2.5பில்லியன் டொலர் பெறுமதியான 2,380 கிலோ மீற்றர் நீளமான எரிபொருள் வழங்கல் குழாயையும் நிர்மாணிக்கும் ஒப்பந்தத்தை இரு நாடுகளும் செய்து கொண்டன. இரவாடி நதி மின் உற்பத்தியில் 90 வீதம் சீனாவிற்கே செல்லும் என்பதால் அதற்குப் பலத்த எதிர்ப்பு மியன்மாரில் உரு வானது. இதனால் அந்தத் திட்டம் இடை நிறுத்தப்பட்டது. இந்த எதிர்ப்புக்கு யார் தூபமிட்டார்கள் என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை.



2011ஆம் ஆண்டு மியன்மாரில் சீன ஆதிக்கமும் முதலீடும் உச்சத்தை அடைந்தது. மியன்மாருக்கான அந்நிய நேரடி முதலீட்டில் 70 விழுக்காடு சீனாவில் இருந்தே வந்தது. இப்போதும் மியன்மாரின் ஏற்றுமதியில் 37 விழுக்காடு சீனாவிற்கானதே. மியன்மாரின் இறக்குமதியில் 30 விழுக்காடு சீனாவில் இருந்தே வருகின்றது.

**வெற்றி பெற்ற ஆங் சூ கீ**

மேற்கு நாட்டு ஊடகங்கள் பல தேர்தலில் வெற்றி பெற்ற ஆங் சூ கீயை ஒரு மக்களாட்சி யின் தேவதையாக சித்தரித்துக் கொண்டிருக்கின்றன. இதே சித்தரிப்பு மைத்திரிக்கும் ரணிலுக்கும் அவ்வப்போது செய்யப்படுவதுண்டு. சீனா தனது ஆதிக்கத்தை பர்மாவில் அதிகரிக்க அதற்கு எதிரான அமெரிக்காவின் காய் நகர்த்தல்களும் அங்கு ஆரம்பித்தன. அமெரிக்காவின் முக்கிய காயாக திகழ்பவர் ஆங் சூ கி என்னும் பெண்மணி. ஆங் சூ கீயின் தந்தை பிரித்தானிய ஆட்சியின் கீழ் பர்மா இருந்த போது தலைமை அமைச்சராக இருந்தவர். பின்னர் 1947இல் இவர் கொலை செய்யப்பட்டார். ஆங் சூ கீ 1990 இல் ராஃப்டோ பரிசு, சாக்கரோவ் பரிசு, மற்றும் நோபல் பரிசு (1991) ஆகியவற்றைப் பெற்ற பர்மியப் பெண்மணி. ஐரோப்பிய யூனியன் அமைப்பின் சார்பில் வழங்கப்படும் மனித உரிமைகளுக்கான சக்காரோவ் விருது 1990ஆம் ஆண்டு ஆங்சான் சூ கீ சிறையில் இருந்த போது அவருக்கு வழங்குவதாக அறிவிக்கப்பட்டது. ஆனால் சுமார் 23 ஆண்டுகளுக்கு பிறகு அவ்விருதினை 2013இல் ஆங் சான் சூ கீ பெற்றுக் கொண்டார். 1992 இல் இந்திய அரசின் சவகர்லால் நேரு அமைதிப் பரிசும் இவருக்கு வழங்கப்பட்டது. பின்னர் 2007 இல் கனடா அரசு இவரை அந்நாட்டின் பெருமைக்குரிய குடிமகளாக அறிவித்தது. இத்தனை பரிசுகளையும் பெற்ற ஆங் சூ கீ பர்மாவில் வாழும் இஸ்லாமியர்களான ரொஹிங்கியர்கள் படுகொலை செய்யப்படும் போதோ நாட்டை விட்டு விரட்டப்படும் போதோ கண்டன அறிக்கை ஏதும் விடவில்லை. அதற்கு அவர் சொல்லும் விளக்கம் நான் ரொஹிங்கியர்களுக்கு ஆதரவாகக் குரல் கொடுத்தால் அது நிலைமையை மேலும் மோசமாக்கும். ஆனால் அவர் வாக்கு வேட்டை அரசியலுக்காகத்தான் மௌனமாக இருக்கின்றார்.

2014ஆம் ஆண்டு பர்மிய(மியன்மார்) படைத்துறை ஆட்சியாளரான தெயின் செயின் ஐக்கிய அமெரிக்கா சென்று வெள்ளை மாளிகையில் அதிபர் பராக் ஒபாமாவைச் சந்தித்தார். பல மனித உரிமை அமைப்புக்களினதும் தெயின் செயினால் பாதிக்கப்பட்டவர்களினதும் எதிர்ப்புக்களுக்கு மத்தியில் இது நடந்துள்ளது.

**பர்மாவா மியன்மாரா?**

பர்மாவில் பல முசுலிம்கள் கொடூரமாகக் கொல்லப்பட்ட போது அதைத் தடுக்க எதுவும் செய்யாமல் இருந்தார் அதிபர் தெயின் செயின். அந்த இனக்கொலையாளியை பராக் ஒபாமா வெள்ளை மாளிகையில் சந்தித்தார். படைத்துறை ஆட்சியாளர்கள் பர்மாவிற்கு வைத்த மியன்மார் என்னும் பெயரை வெள்ளை மாளிகை ஏற்க மறுத்திருந்தது. பின்னர் தன் நிலைப்பாட்டை மாற்றி மியன்மார் எனச் சொல்லத் தொடங்கிவிட்டது. தீண்டத்தகாத ஆட்சியாளர் என பன்னாட்டுச் சமூகத்தினரால் கருதப்பட்ட தெயின் செயின் திடீரென நல்லவராகி விட்டது எப்படி? பத்திரிகைகளில் தனக்கு எதிராகக் கருத்துத் தெரிவித்தவரை அறுபது ஆண்டுகள் சிறைத்தண்டனை வழங்கியவரை ஒபாமா எப்படி வெள்ளை மாளிகைக்கு அழைத்தார்? பர்மாவில் சில அரசியல் சீர்திருத்தங்கள் செய்தது உண்மைதான் ஆனால் இப்போதும் மக்களால்

( 22 ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொலிஸஅக்கும் போதைக் கடத்தல் காரர்களுக்கும் இடையே நடக்கும் இழுபறி சமாச்சாரம்தான் கதை! பொலிஸ் என்றால் இது காக்கி பொலிஸ் இல்லை! கருப்புக்கோட் பொலிஸ்.


கமலுக்கு ஒரு பெண்டாட்டி. நல்லவேளை முத்தம் கொடுக்க முடியாத தொலைவில் இருந்து கொண்டு அவ்வப்போது போன்

அப்பாவை மகன் புரிந்து கொள்வது. பொலிஸஅக்குள் நடக்கும் அரசியல் என்று நிறைய சமாச்சாரங்களை தொட்டிருக்கிறார் இயக்குனர் ராஜேஷ் எம். செல்வா.

ஒரு கிளப் எப்படியிருக்கும் என்பதை இளசுகளின் அணைப்பும், இரவின் கூச்சலுமாக தத்ரூபமாக காட்டியிருக்கிற அவர்,

அவர் வயிற்றை கிழித்துவிடுகிறது கதை. அதற்கப்புறம் அந்த கிளப்பில் அவரை நையப் புடைக்கிறார்கள் வந்து போகிறவர்களெல்லாம். அவரும் பல இடங்களில் முரட்டு அடி அடித்து, முரட்டு அடிவாங்கி கலவையான மனநிலைக்கு தள்ளுகிறார் தன் ரசிகனை. கமல் என்றால் உதட்டு அல்வா இல்லாமலா? செம 'கிஸ்' ஒன்றும் இருக்கிறது. தப்பித்து ஓடுகிற போது ஒளிவதற்கு ஒரு பீரோவோ, பெட்ஷீட்டோதானே அகப்படும் மற்றவர்களுக்கு? ஆனால் கமல் ஒரு பெண்ணின் உதட்டை தேடியிருக்கிறார். இடி இடிச்சாலும் மழை பொழிஞ்சாலும் காரியத்துலே உதடு?

த்ரிஷாவுக்கு நல்ல






பொருத்தமான ரோல்தான். ஆனால் அவ்வளவு அதிகாரமுள்ள பொலிஸ் அதிகாரிகள், அந்த கிளப்பை சற்று நேரம் மூடி குளோஸ் பண்ணி, அதிரடியாக சோதனை செய்திருக்கலாமே?

எல்லாரும் எல்லா வகையிலும் நடித்துக் கொண்டிருக்க, கமல் மகனாக நடித்திருக்கும் அந்த சிறுவனின் நடிப்பு மிக இயல்பானது. அலாதியானது. தன் அப்பா மீது கொஞ்சம் கொஞ்சமாக அன்பு கொள்ளும் அவன், அவரை தாக்கிய ஒருவனின் மீது கையிலிருக்கிற ஒரு பொருளை வீசிவிட்டு, அப்பாடா

பண்ணி அதட்டுகிறார். வேறொன்றுமில்லை. அவருக்கும் இவருக்கும் விவாகரத்து. இவர்களின் ஒரே மகன் கமல் வீட்டில் கொஞ்ச நாளும். மனைவி ஆஷா சரத் வீட்டில் கொஞ்ச நாளும் இருப்பான் போல. ஸ்கூலுக்கு அவனை கொண்டு போய் விடுகிற கமல், அன்று அதிகாலையிலேயே ஒரு வேலை செய்கிறார். போதைப் பொருளான கொக்கைன் கடத்தும் ஆசாமி ஒருவனை சுட்டுக் கொன்றுவிட்டு, கொக்கைனை தன் கஸ்டடியில் வைத்துக் கொள்கிறார்.

அன்றைய தினமே ஸ்கூலுக்கு போன மகனை கொக்கைன் பறிகொடுத்த கும்பல் கடத்திவிட, பொருளை திருப்பிக்கொடுத்து விட்டு மகனை மீட்க கிளம்பு கிறார் கமல். மீட்டாரா? போன இடத்தில் என்ன நடந்தது? ஒரு ராத்திரியில் நடக்கும் கதை.

ஆங்காங்கே குழந்தைப்பாசம்.

அவ்வளவு குடி கூத்துகளுக்கு நடுவில் ஒரு அப்பனின் தவிப்பையும் அழகாக காட்டியிருக்கிறார்.

கமல் என்ற காட்டு சிங்கத்திற்கு, சிறிய வேடம்தான். யதார்த்தம் அதுதான் என்பதால் அதற்குள் நுழைந்து கொள்கிறார் அவரும். ஒரு பொலிஸ்காரனின் நரிப்புத்தி எப்படி வேலை செய்யும் என்பதற்கான உதாரணமாக ஒரு பொட்டலத்தை மட்டும் வில்லன் பிரகாஷ்ராஜிடம் காட்டிவிட்டு, பைய்னை காட்டு. மீதியை கொண்டு வந்து தர்றேன் என்பது நெத்தியடிதான். அதுவே பிற்பாடு அவருக்கு சுத்தியடியாக முடிவது பாவமாக இருக்கிறது. ஒரு கட்டத்தில் மகனை மீட்க முடியாமல் போய்விடுமோ என்று அஞ்சி அழும்போது, நமக்கும் நெஞ்சடைத்துக் கொள்கிறது.

படத்தில் கமல் அடி வாங்க வேண்டுமே? காலையிலேயே



கதாபாத்திரம். பெண் மனசாட்சே? கமலுடன் அவ்வளவு ஆக்ரோஷமாக மோதிய பின் அவரது நிலைமையை நினைத்துப் பார்த்து கொக்கைன் இருக்கும் இடத்தை சொல்லும்போது, காப்பாத்திட்டீயே தாயி' ஆகிறார்.

நாலே நாலு சீன் வந்தாலும், நான் நான்தாண்டா என்கிறார் பிரகாஷ்ராஜ். அவரது நக்கல் சிரிப்பும், நரிப்பார்வையும் பிரம்ம்ம்மாதம்! கிஷோரின் ஹைட்டுக்கும், வழுக்கை மண்டைக்கும், கூரான பார்வைக்கும்

என்று பெருமை கொள்கிற போது 'அப்பாடா' என்றாகிறது மனசு.


ஜெகன் என்ற அருவறுப்புக்கும் நல்ல ரோல் கொடுத்திருக்கிறார் கள். நல்லவேளை தம்பி. அதிகம் பேசி எரிச்சல் தரவில்லை.

இசை ஜிப்ரான். பின்னணி இசைக்குதான் அதிக வேலை. உணர்ந்து செய்திருக்கிறார். சானு ஜான் வர்கீசின் கமெராவும் 'லைட்டிங்கும் லைவ்'

அதுவரை கம்பீரமாக வந்த பொலிஸ் அதிகாரிகள் எல்லாம் படம் முடிந்தபின் இடுப்பை நெளித்து டான்ஸ் ஆடுகிறார்கள். அந்தப் பாடல் கருமம் படத்தில் இல்லாவிட்டால்தான் என்னவாம்?

தூங்காவனம், பலரும் எதிர்பார்த்த மாதிரி தொங்கா'வனமாக அமையவில்லை. தப்பித்தோம்!

-ஆர். எஸ். அந்தணன்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பிரமன்

# ஏட்டுச்சுரக்காய் சாபங்கள்



**அவர் ஒரு புகழ் பூத்த கணித அறிஞர். அவருக்கு உயிர், சுவாசம் எல்லாமே கணிதம் தான். எல்லாவற்றிலும் கணித அறிவைப் பிரயோகிக்கா விட்டால் அவருக்கு 'பொச்சம்' தீராது. சோறு சாப்பிடும் போது கூட எத்தனை சோற்றுப் பருக்கைகளை உண்டார் என்று கணக்கிட்டுக் கொண்டு தான் சாப்பிடுவார். அந்தளவுக்கு அவர் ஒரு கணிதன். இந்தக் கணிதன் ஒரு நாள் வேற்றூருக்குப் பயணமானான். செல்லும் வழியில் ஒரு காட்டாறு குறுக்கிட்டது. எப்படியாவது அக்கரைக்குப் போக வேண்டும். அது மிக ஆழமான ஆறு. எனவே படகில் தான் செல்ல வேண்டும். ஆனால் படகோட்டியோ இருநூறு ரூபா கேட்டான். கணிதன் கஞ்சனும் கூட. படகோட்டிக்குக் காசைக் கொடுப்பதை விட தானே அதைக்கடக்க எண்ணினார். கணித அறிவு இருக்கும் போது கவலை என்ன? பட பட என அவர் இரு கரைகளின் ஆழத்தையும் கணக்கிட்டார். கரைகளின் ஆழம் 3 அடிதான். படகோட்டியிடம் "ஆற்றின் ஆழம் எவ்வளவு?" என்று கேட்டான். அதற்கு அவன் "8 அடி ஆழம்" என்று சொன்னான். இவர் கரையின் ஆழத்தையும் நட்டாற்றின் ஆழத்தையும் கூட்டி சராசரியைக் கணித்தான். ஐந்தரை அடி தான். கணிதனின் உயரம் ஆறடிக்கும் சற்று அதிகம். ஆகவே ஆற்றைக்கடக்கலாம் என்று அவரது கணித அறிவு பச்சைக் கொடி காட்டியது. விறுவிறு என்று ஆற்றுக்குள் இறங்கினான். ஆற்றின் நடுப்பகுதிக்குச் சென்ற போது எட்டடிக்குள் சிக்கி ஆறடிக் கணிதன் மூழ்கிப் போனான். நல்ல வேளையாக படகில் வந்த படகோட்டி அவரை இழுத்துக் காப்பாற்றினான். அப்போது படகோட்டி சொன்னான் " ஏட்டுச் சுரக்காய் கறிக்குதவாது"**

மாரி மழை இந்த முறை தன் கைவரிசையை மிகநன்றாகவே காட்டிக் கொண்டிருக்கிறது. வழமை போலவே ஒவ்வொரு வருடமும் எங்கெல்லாம் வெள்ளம் பெருக்கெடுக்குமோ அங்கெல்லாம் இந்த முறையும் பெருக்கெடுத்து மக்களை அவதிக்குள் தள்ளும் வேலையை மழை கச்சிதமாகச் செய்திருக்கிறது. அதிலும் வன்னியின் பெரும்பாலான பகுதிகளும் குடாநாட்டின் தாழ்வான பகுதிகளும் வெள்ளப் போர்வையால் இழுத்து மூடப்பட்டு விட்டன. இந்தப் பகுதிகளிலெல்லாம் கடந்த காலங்களில் அபிவிருத்தித் திட்டங்கள் அமோகமாக நடந்தேறி இருந்தன. புதிய வீதிகளும் மதகுகளும், பாலங்களும், கால்வாய்களும் வெள்ளம் வழிந்தோடும் வகையில் அமைக்கப்பட்டன. அப்படியிருந்தும் இப்போதும் வெள்ளம் வழமையான வாடிக்கையாளர் போல சௌகரியமாக தேங்கி நிற்பது எப்படி?

இந்தப் பத்தியின் ஆரம்பத்தில் சொல்லப்பட்ட கதையில் வரும் கணிதனைப் போலவே பலரும் ஏட்டுச்சுரக்காய்களையே கறிக்கு உதவும் என்று நம்புகிறார்கள். இதனாற் தான் கணிதனைப் போலவே பல திட்டங்கள் கேட்பதற்கு நன்றாக இருந்தாலும் பிரயோக ரீதியில் தோற்றுப் போய் விடுகின்றன.

திட்டத்துக்கு கணக்கு காட்டவும், தங்கள் பைகளை சிலர் நிரப்பிக் கொள்ளவுமே அபிவிருத்திப் பணிகள் உதவுகின்றனவே தவிர உண்மையில் மக்களின் இடர் தீர்ப்பதில்லை என்பதே வெள்ளம் சொல்லும் உண்மை. வீதி அகலிப்பு அல்லது அபிவிருத்தி என்ற பெயரில் மேற்கொள்ளப்படும் பணிகளில் உண்மையில் அந்தந்த சூழலுக்குரிய இயையாக்க தன்மைகள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். அத்துடன் சுற்றுச் சூழல் தொடர்பான பரந்து பட்ட அறிவும் தொலைநோக்கும் அவசியம். உண்மையான அபிவிருத்தித் திட்டம் ஒன்றைச் செயற்படுத்த வேண்டுமானால் அத்திட்டம் நடைமுறைப் படுத்தப்பட வேண்டிய பகுதிக்குரிய மக்களிடம் ஆலோசனைகள் பெறப்பட்டு அவையும் உள்வாங்கப்படுவது வழமையான செயற்பாடு. ஆனால் அத்தகைய வழமை இலங்கையில் அதுவும் தமிழர் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திகளின் போது கிஞ்சித்தேனும் கைக்கொள்ளப் படுவதில்லை. அதனாற்தான் பல திட்டங்கள் பலகோடிகளைக் கொட்டி செயற்படுத்தப்படுகின்ற போதும் அவை உரிய பலாபலனைப் பெறத் தவறி விடுகின்றன. அவற்றில் ஒன்று தான் இவ்வாறான மதகுகள், பாலங்கள் அமைக்கப்பட்டும் ஒவ்வொரு வருடமும் வெள்ளம் பல்லைக்காட்டி சிரிக்கும் விடயம்.

வீதி அகலிப்பு அல்லது அபிவிருத்தி என்ற பெயரில் மேற்கொள்ளப்படும் பணிகளில் உண்மையில் அந்தந்த சூழலுக்குரிய இயையாக்க தன்மைகள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். அத்துடன் சுற்றுச் சூழல் தொடர்பான பரந்து பட்ட அறிவும் தொலைநோக்கும் அவசியம். உண்மையான அபிவிருத்தி திட்டம் ஒன்றைச் செயற்படுத்த வேண்டுமானால் அத்திட்டம் நடைமுறைப் படுத்தப் பட வேண்டிய பகுதிக்குரிய மக்களிடம் ஆலோசனைகள் பெறப்பட்டு அவையும் உள்வாங்கப்படுவது வழமையான செயற்பாடு. ஆனால் அத்தகைய வழமை இலங்கையில் அதுவும் தமிழர் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திகளின் போது கிஞ்சித்தேனும் கைக்கொள்ளப் படுவதில்லை. அதனாற்தான் பல திட்டங்கள் பலகோடிகளைக் கொட்டி செயற்படுத்தப்படுகின்ற போதும் அவை உரிய பலாபலனைப் பெறத் தவறி விடுகின்றன.



கடமைக்கு பாலங்கள் அமைக்கப்படுகின்றவே தவிர அவை உரிய முறையில் வெள்ளத்தைக் கடத்துமா? மழைநீர் வழிந்தோடக் கூடிய வகையில் அமைக்கப்படுகிறதா என்பனவெல்லாம் கருத்தில் கொள்ளப்படுவதில்லை.

சில வருடங்களுக்கு முன்னர் யாழ் குடாநாட்டில் வீதி அபிவிருத்திப் பணிகள் ஒரே சமயத்தில் முன்னெடுக்கப்பட்ட போது யாழ் நகரிலிருந்து தீவுப்பகுதி நோக்கிச் செல்லும் பிரதான பாதையிலுள்ள பண்ணைப்பாலம் பல மில்லியன் ரூபா செலவில் மீள அமைக்கப்பட்டிருந்தது. ஆனால் பண்ணைக் கடலில் இயல்பு என்னவென்று அறியாமல் அந்தப் பாலம் அமைக்கப்பட்டது. எனினும் பண்ணைக்கடல் இப்போது ஒரே பாதையில் நகர்வதில்லை. இரவில் ஒரு திசையை நோக்கியும் பகலில் அதற்கு எதிர்த்திசை நோக்கியுமே பண்ணைக்கடலின் நீரோட்டம் இருக்கின்றது. அந்த நீரோட்டத்துக்கு ஒத்திசைவாக பாலம் அமைக்கப்படாமையால் ஒரு திசை நோக்கிய நீரோட்ட நகர்வு தடுக்கப்பட்டிருந்தது. இதனால் கடலின் இயல்பும் மாறத் தொடங்கியதுடன், தடுக்கப்பட்ட நீரோட்டம் பாலத்தோடு எப்போதும் மோதிக்கொண்டே இருப்பதால் எதிர்பார்க்கப்பட்ட காலத்தை விடவும் விரைவாகவே பாலம் பலமிழக்கக் கூடிய அபாயம் தோன்றியிருந்தது. நல்ல வேளையாக யாழ் நகரிலிருந்து ஊர்காவற்றுறை வரை செல்லும் வீதி புனரமைக்கப்படும் போது இந்தக் குறை கண்டுபிடிக்கப்பட்டது. இப்போது ஒரு சில வருடங்களேயான - பல மில்லியன்களை விழுங்கிய - பண்ணைப்பாலம் உடைக்கப்பட்டு மீண்டும் புதிய பாலம் அதைவிட அதிக செலவில் அமைக்கப்பட்டு வருகிறது. இது இருமுனை நீரோட்டத்துக்கு ஏற்றதாக இருக்கும் என்று சொல்லப்படுகிறது. என்றாலும் கட்டி முடிக்கப்பட்ட பின்னர் தான் அதன் 'சீத்துவம்' தெரியும். சில வேளைகளில் இது கூட குறைகளோடு அமைக்கப்பட்டு இன்னும் சில வருடங்களில் புதிய பாலம் ஒன்றை அமைப்பதற்கு வழியேற்படுத்தி விடக் கூடும்.


வழமையாகவே வெள்ளம் தேங்கும் இடங்களை அடையாளப்படுத்தி அவற்றை முற்கூட்டியே வெள்ள

(18 ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிம்மசொப்பனம் - 50



ஆட்சிக்கு வருமுன் 160 ஏக்கர் நிலம் இருந்தது. இப்போது எப்படி 1944 ஏக்கராக விரிவடைந்தது என்று கொஞ்சம் சொல்லுங்களேன்! என்று கேள்வி எழுப்பினார். மக்களுக்கு ஒன்று மட்டும் தெளிவாகப் புரிந்தது. "ஐயோ! பாவம்! இந்தக் காஸ்ட்ரோ தம்பி, இன்னும் எத்தனை நாள்கள் உயிர் வாழப் போகிறானோ" முன்பு பிரியோ, இப்போது பாடிஸ்டா , போராட்டத்துக்கு முடிவே கிடையாது.

எல்லோருக்கும் தெரிந்தவராக காஸ்ட்ரோ மாறிப் போயிருந்தார். என்றாலும் பெரிய அளவில் அவருடன் இணைந்து செயல்பட எவரும் முன் வர வில்லை. அவர் சொல்வதெல்லாம் சரி தான். ஆனால், துப்பாக்கி பிடித்து சண்டைபோட நாங்கள் தயாராக இல்லை என்பது தான் காஸ்ட்ரோ அனுதாபிகளின் நிலைப்பாடு. காஸ்ட்ரோ அவர்களைக் கட்டாயப் படுத்தவில்லை. ஆனால் , அதே சமயம் தனது பிரசாரத்தையும் அவர் நிறுத்திக்கொள்ளவேயில்லை. 1952 வரை அவரோடு இணைந்தவர்கள் மொத்தம் பன்னிரண்டு பேர் மட்டுமே. அவர்களில் குறிப்பிடத்தகுந்தவர்கள் சிலர். ஒருவர் மெல்பா பெர்னான்டஸ் எனும் பெண் மணி. காஸ்ட்ரோவை விட மூத்தவர். துப்பாக்கி பிடிக்கச் சொன்னால் பிடிக்கிறேன், உயிரை விடச்சொன்னால் விடுகிறேன் என்று களத்தில் தையரியமாகக் குதித் தவர். அடுத்து மிரட் பிட்ரோ. இவர் ஒரு பொறியியல் கல்லூரி மாணவர். அடுத்து ஆர்தோடாக்ஸ் கட்சியி லிருந்து இணைந்து கொண்ட வாஸ்டஸ். காஸ்ட்ரோ வின் தம்பி ரால் காஸ்ட்ரோவும் ஈடுபாட்டோடு உழைத்துவந்தார்.

காஸ்ட்ரோவிடம் ஆவேசம் இருந்தது. ஆனால் அவசரம் இல்லை. பொறுமையாகவே முன்னேறிக் கொண்டிருந்தார். ஆள்களைப் பார்த்துப் பார்த்து தேர்ந்தெடுத்தார். அவர் நம்பியிருந்தது பிரச்சாரத்தை மட்டுமே. நிறைய வாசித்தார். நிறைய விவாதித்தார். மேடை என்று ஒன்று கிடைத்துவிட்டால் வெடித்து கிளம்பி விடுவார். ஏன் அரசைக் கவிழ்க்க வேண்டும்? அதற்கான அவசியம் என்ன? புரட்சி என்றால் என்ன? அனைத்து கேள்விகளுக்கும் விடையளித்தார். மணிக்கணக்கில் பேசினார்.

ஒரு பத்திரிகையைத் தொடங்கினார்கள். அதன் பெயர் 'குற்றம் சாட்டுகிறேன்!' பெயர் சொல்வதைப் போல் பாடிஸ்டார் அரசைக் குற்றம் சாட்டுவது , அவர்களது தில்லுமுல்லு காரியங்களை வெளிச்சம் போட்டுக் காட்டு வது. புரட்சிப் பாதையில் பயணிக்க மக்களைத் திரட்டுவது... இவை மூன்றும் தான் அந்தப் பத்திரிகை யின் பிர தான குறிக்கோள். அலெஜாண்ட்ரோ எனும் பெயரில் காஸ்ட்ரோ பல கட்டுரைகளை எழுதினார். இது தவிர கம்யூனிஸ்டு மாணவர்களின் பத்திரிகையிலும் அவர் எழுதி வந்தார். இந்தப் பத்திரிகையை யார் நடத்துகிறார்கள். யார் யாரெல்லாம் எழுதுகிறார்கள் , யார் யாரை எல்லாம் இந்தப் பத்திரிகை சென்றடைகிறது போன்ற விபரங்கள் ரகசியமாக வைக்கப்பட்டன. இருப்பதிலேயே விலை அதிகமாக இருந்த ஸ்டேன்சில் கருவியை ஒருவர் மாற்றி ஒருவர் தன் வீட்டில் கொண்டு போய் வைத்திருப்பார்கள்.

பாடிஸ்டாவை நேரடியாகக் குறிவைத்து பல கட்டுரைகளை எழுதினார் காஸ்ட்ரோ. அரசாங்கத்தை காட்டமாக விமரிசித்தார். அச்சுக் கருவிகள் கைப்பற்றப்பட்டன. காரஸ்ட்ரோவின் தோழர்கள் பலர் கைதாகினர்.

## சொற்சிலம்பம் போட்டி இல. 699

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | | ■ | 5 |
| 6 | | ■ | 7 | | ■ | 8 | |
| 9 | | 10 | ■ | 11 | 12 | | |
| 13 | | | 14 | ■ | 15 | | ■ |
| | ■ | 16 | | 17 | | ■ | 18 |
| 19 | 20 | ■ | 21 | | ■ | 22 | |
| ■ | 23 | 24 | | | 25 | ■ | |
| 26 | | | ■ | 27 | | | |

### மேலிருந்து கீழ்

1. மரியாதை கொடுக்காத தன்மை.
2. நித்திரை செய்யும் இடம்.
3. அதிக.
4. சாகுபடி செய்யப்படாத நிலம்.
5. புண்ணிய இடம்.
8. துக்கம்.
10. சிறிய குடுவை.
12. கால்.
14. மகள்
17. நிற்கும் / நிறுத்தும் இடம்.
18. முகம் பார்க்க உதவும்.
20. இயலாது எனக் கூறும் பதிலை இப்படிக் கூறுவர்.
24. ரகம்.
25. பறவை.

### இடமிருந்து வலம்

1. அளவுக்கு மிகுதியாக.
6. காயத்தின் அடையாளம்.
7. எரிந்த பின் மிஞ்சுவது.
8. ஒன்றுடன் மற்றொன்றைச் சேர்க்குமாறான கட்டளை.
9. முட்டாளை இப்படிக் கூறுவர்.
11. ஒருவரின் இயற்கையான தன்மை.
13. எதிர்பாராது ஒன்றைச் சந்திக்கும் போது ஏற்படும் உணர்வு.
15. சென்னி.
16. சமிபாட்டுடன் தொடர்புடையது.
19. நெருப்பில்லாமல் இது வருமா?.
21. மூன்று.
22. இசைப்பாட்டு.
23. விவரத்தை பூரணமாக வெளியிடுதல் .
26. முழங்கும் தோற்கருவி.
27. வாக்குச் சீட்டில் போடுவது.

அனுப்புபவர் பெயர்:............................................

விலாசம்:............................................

............................................

கையொப்பம்:............................................

### சொற்சிலம்பம் போட்டி இல. 699

**சொற்சிலம்பம் போட்டி 699ற்கான விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2015 ஆம் ஆண்டு டிசெம்பர் 02 ஆம் திகதி ஆகும். விடைகள் மற்றும் வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் முறையே டிசெம்பர் 09 ஆம் மற்றும் டிசெம்பர் 16ஆம் திகதிய சுடர் ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண் ணப்பங்கள் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும். முதலாவது பரிசாக ரூபா 250 உம் இரண்டாவது பரிசாக ரூபா 150 உம் மூன்றாவது பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.**

அனுப்ப வேண்டிய முகவரி:

**சுடர் ஒளி யாழ். அலுவலகம்,**

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## போட்டி இல. 696இல் பரிசு பெற்றோர்

| | |
|---|---|
| 1 ஆம் பரிசு | செல்வி . மே. வெ.மரியநாயகம், இல 1625, இரத்தினபுரம், கிளிநொச்சி. |
| 2 ஆம் பரிசு | ஜெ. வெஸ்மிலா, இல 9/1, பழம்றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். |
| 3 ஆம் பரிசு | திருமதி . சி. புஸ்பராணி, வசந்தபவனம், மருதடி மேற்கு, சாவகச்சேரி. |

## சொற்சிலம்பம் போட்டி இல. 697க்கான விடைகள்

**மேலிருந்து கீழ்**

*1. மதுரகவி.*
*2. காந்தி.*
*3. மது.*
*4. கபிலன்.*
*5. சக.*
*6. திருவுள்ம்.*
*8. நன்.*
*11. வனிதை.*
*12. கடிதம்.*
*13. அயலவன்.*
*15. நாவலர்.*
*17. ரிசி.*
*20. சகா.*
*21. பாரி.*
*23. தினை.*

**இடமிருந்து வலம்**

*1. மகாமகம்.*
*5. சதி.*
*7. துந்துபி.*
*8. நகரு.*
*9. ரதி.*
*10. லவன்.*
*12. கன்னி.*
*13. அள.*
*14. விநாடி.*
*16. தைரியம்.*
*18. வதம்.*
*19. சில.*
*20. சலம்.*
*22. வதி.*
*24. கார்.*
*25. பெரியன்னை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஆதாங்கன்

கடந்த வாரம் வெள்ளிக்கிழமை இலங்கையர்களது கண்கள் எதிரே உள்ளவர்களைப் பார்ப்பதை விடவும் அடிக்கடி வானை நோக்கி துழாவிய படி இருந்தன. அதற்கு காரணம் கொட்டிக்கொண்டிருக்கும் பெருமழை அல்ல. மாறாக இலங்கை கடலில் நீராடும் ஆவலோடு வந்து கொண்டிருந்த மர்ம விண்பொருளைப் பார்ப்பதற்கே அப்படிக் கண்கள்




# நாங்கள் மண்ணில் அவர்கள் விண்ணில்

அலைபாய்ந்தபடி இருந்தன.

இலங்கை ஆர்தர் சி. கிளார்க் வானியல் ஆய்வு மையத்தினர் விண்பொருள் விழும் என எதிர்பார்க்கப்படும் கடலோரமாக நவீன தொலைக்காட்டிகளோடு இமைவெட்டாமல் விண்ணையே பார்த்துக் கொண்டிருந்தார்கள். பார்த்துப் பார்த்துப் கண்கள் பூத்தது தான் மிச்சம். விண்பொருள் விழுந்தபாடாக இல்லை. ஏற்கனவே கணித்த படி குறித்த விண்பொருள் பகல் ஒரு மணிக்கு முன்னதாக வீழ்ந்திருக்க வேண்டும். ஆனால் இரண்டு மணிக்கு மேலாகியும் ஆர்தர் சி. கிளார்க் ஆய்வாளர்களின் கண்ணில் எதுவுமே தட்டுப்படவில்லை. என்றாலும் நம்பிக்கையை இழக்காமல் அவர்களின் அவதானிப்பு தொடர்ந்த படியே இருந்தது.

இந்த நேரத்தில் தான் அவர்களுக்கு ஓர் தொலைபேசி அழைப்பு ஐக்கிய அரபு இராச்சிய வானியல் முகவர் நிறுவனத்திடமிருந்து வந்தது.

**"இலங்கை வான்பரப்பில் விண்பொருள் எரிந்து விட்டது. இனி** ஆபத்து இல்லை. அந்த விண்பொருள் எரியும் காட்சி எங்களிடம் உண்டு" என்ற தகவல் கிடைத்த பின்னர் தான் தாங்கள் 'பேய்க்குப் பேன் பார்த்துக் கொண்டிருக்க' விண்பொருள் தன்பாட்டிலேயே சமாதியான விடயம் இலங்கை வானியல் ஆய்வாளர்களுக்குத் தெரிய வந்தது.

இலங்கையை முத்தமிட இருந்த குறித்த விண்பொருள் கடைசி வரைக்கும் எத்தகையது என்ற விடயம் அடையாளப்படுத்தப்படவில்லை. எல்லோரும் அதனை WT1190F என்ற சங்கேதப் பெயருடன் 'மர்ம விண்பொருள்' என்று தான் அது அடையாளப்படுத்தப்பட்டதே தவிர விண்கல்லா தூசிப்படலமா? வால்வெள்ளித் துகளா ? விண்கலன்களின் எச்சமா? என்று உறுதியாக எவரும் கூறவில்லை. ஆயினும் அமெரிக்கா விண்ஞ்ணுக்கு அனுப்பிய விண்கலம் ஒன்றின் உடைந்து போன துண்டம் ஒன்றே தன்னுடைய சுழற்சிப் பாதையிலிருந்து வழி தவறி இலங்கையைக் குறி வைத்து வந்து கொண்டிருப்பதாக ஊகிக்கப்பட்டது. விண்பொருளை விடவும் விண்கலங்களின் எச்சங்கள் ஆபத்தானவை. ஏனெனில் விண்கலங்கள் உருவாக்கத்தின் போது புவியில் வாழ்வுக்கு ஒவ்வாத இரசாயனப் பொருள்கள் பயன்படுத்தப் படுவதுண்டு. இந்த இரசாயனப் பொருள்கள் விண்ணில் வேறு பல, இரசாயன கலவைகளோடு தாக்கமுற்று இன்னும் அதன் வீரியத் தன்மை அதிகரித்திருக்கும். எனவே இத்தகைய கதிரியக்கத் தன்மை கூடிய விண்கல எச்சங்கள் பூமியைத் தொடும் போது

**இலங்கை ஆய்வாளர்கள் கீழே நின்ற படியே விண்பொருளைப் பார்க்கலாம் என்ற புராதானகால முறைமையை கையில் எடுத்திருந் தனர். ஆனால் ஐக்கிய இராச்சியக் காரர்கள் கொஞ்சம் வித்தியாச மாக யோசித் தார்கள். ஏனெனில் விண்பொருள் விழும் காலப்பகுதி யில் இலங்கையில் மழைக் காலம் என்பதால் வானை மேகங் கள் மூடியிருக்கும். எனவே கீழிருந்து வான்வெளியை அவதானிப்பது என்பது சாத்தியமற்ற விடயம். ஆகவே மேகக் கூட்டத்தை த் தாண்டி வான்வெளிக்கே சென்று அவதானிப்பதே பொருத்தமாக இருக்கும் என்று ஐக்கிய அரபு இராச்சிய ஆய்வாளர்கள் கணித்தார்கள். இதன்படியேவிமானத்திலிருந்த படி விண்ணை ஆராய்ந்து விண்பொருள் எரிவதைப் படம் எடுத்தும் விட்டார்கள்.**

அது வீழும் பகுதியில் பெரும் தாக்கத்தை உண்டு பண்ணக் கூடும். அது உடனடித் தாக்கமாகத் தான் இருக்க வேண்டும் என்றில்லை. குறித்த பொருள் வீழ்ந்து பல நாள்களின் பின்னர் கூட அதன் பாதிப்புகள் வெளிப்படலாம். எனவே தான் இத்தகைய விண்கலக் குப்பைகளின் பூமி நோக்கிய வருகையை சர்வதேச விஞ்ஞானிகள் அச்சத்தோடு அவதானித்தபடி இருக்கிறார்கள்.

விண்ணை ஆளும் ஆசையில் வல்லரசு நாடுகள் போட்டி போட்டுக் கொண்டு விண்கலங்களையும், செய்மதிகளையும் ஏவிக்கொண்டிருக் கிறார்கள். இத்தகைய விண்கலங்கள் அல்லது செய்மதிகள் எல்லாமே திட்டமிட்ட படி வானில் வெற்றிகரமாக வலம் வருவதில்லை. ஒரு கட்டத்தில் பூமியிலுள்ள கட்டுப்பாட்டறையுட னான தொடர்புகள் துண்டிக்கப்படும் தருணத்திலிருந்து குறித்த விண்கலம் தன்னிஷ்ரப்படி தனது சுழல்தலை வடிவமைத்துக் கொள்கிறது. இப்படியான சுழற்சியின் போது வேறு விண்பொருள்களுடன் மோதுண்டு பல கூறுகளாக அது சிதைவடையும். அதன் பின்னர் அந்தக் கூறுகள் ஒவ்வொன்றும் தனித்தனி சுழற்சிப் பாதையோடு நகரும்.

செத்துப் போன விண்கலங்களால் உண்டாகும் குப்பைகள் தவிர இன்னொரு வகையிலும் விண்வெளி குப்பையாகவே செய்கிறது. விண்கலங்கள் தொடர்ச்சியாக பயணிப்பதற்கு வசதியாக அவற்றில் இரண்டு மூன்று இயந்திரங்கள் பொருத்தப்படும். ஒரு இயந்திரம் செயலிழக்க அது அப்படியே விண்ணில் கழற்றி விடப்பட்டு மற்றைய இயந்திரம் செயற்படத் தொடங்கும். இப்படி கழற்றி விடப்பட்ட இயந்திரங்களும் 'என் வழி தனி வழி' என்ற போக்கில் சுற்றத் தொடங்கி விடும்.

எத்தனை நாளைக்குத் தான் செக்குமாடு போல சுற்றிச் சுற்றி சுப்பற்ற கொல்லைக்குள் சுழன்று கொண்டிருக்க முடியும்? திடீரென பைத்தியம் பிடித்தது போல ஏதேனும் விண்வெளிக் குப்பை பூமியை நோக்கி ஆவேசமாக ஓடி வரும்.

வழமையான விண்பொருள்கள் பெரும்பாலும் புவியின் வளிமண்டலத்தை தொட்டவுடனேயே எரிந்து சம்பராகி விடும். அத்தகைய ஒரு பாதுகாப்புப் பொறிமுறையே இயற்கையாகவே புவியின் வளிமண்டலம் கொண்டிருக் கிறது. ஆனால் விண்கல குப்பைகள் எல்லாமே அப்படி எரிந்து போகக் கூடியவை அல்ல. ஏனெனில் பூமியில் இருந்து விண்ணுக்குச் செல்லும் போது வளிமண்டலத்தை தாண்ட வேண்டி இருக்கும். அப்போதும் இதே போல விண்கலங்கள் எரிந்து விடாமல் இருக்க பிரத்தியேக இரசாயனப் பதார்த்தங்கள் விண்கல உருவாக்கத்தில் பயன்படுத் தப்பட்டிருக்கும். இதனால் எந்தவித பாதிப்புமின்றி அவை வளிமண்டலத்தை ஊடுருவிச் செல்லும். எனவே அவை மீண்டும் விண்ணில் இருந்து குப்பையாக உருமாறி வளி மண்டலத்தை தொடும் போது எரிந்து போகாமல் முழுமையாக பூமிக்குள் வரும் அபாயம் உள்ளது. அதனால் தான் இந்த முறை இலங்கையை நோக்கி வந்து கொண்டிருந்த விண்பொருள் பொசுங்கிப் போகாமல் தரையில் விழும் என்று எதிர்வு கூறப்பட்டிருந்தது.

ஆனால் நல்ல வேளையாக வளி மண்டலம் அந்த மர்ம விண்பொருளை தனது சக்தியைப் பிரயோகித்து பொசுக்கி விட்டது.

ஆர்தர். சி. கிளார்க் ஆய்வாளர்கள் அணிலேற விட்ட விண்பொருளின் வீழ்தலை எப்படி ஐக்கிய இராச்சிய ஆய்வாளர்கள் படம் பிடித்தார்கள் என்பது முக்கியமான விடயம் ஆகும். ஏனெனில் குறித்த விண்பொருள் பற்றி விரிவான ஆய்வுகளைச் செய்யும் வசதி இலங்கைக்கே அதிகம். ஆனால் எங்கிருந்தோ வந்த ஐக்கிய இராச்சியக் காரர்கள் எரிந்து போன விண்பொருளை படம் எடுத்த பின்னரும் எம்மவர்கள் விண்பொருள் இன்னும் விழவில்லை என்ற நினைப்பில் ஆவென்று வாய்பிழந்து வான்பார்த்த நிகழ்வு தான் நடந்தது. இலங்கை ஆய்வாளர்கள் கீழே நின்ற படியே விண்பொருளைப் பார்க்கலாம் என்ற புராதானகால முறைமையை கையில் எடுத்திருந்தனர். ஆனால் ஐக்கிய இராச்சியக் காரர்கள் கொஞ்சம் வித்தியாசமாக யோசித்தார்கள். ஏனெனில் விண்பொருள் விழும் காலப்பகுதியில் இலங்கையில் மழைக் காலம் என்பதால் வானை மேகங்கள் மூடியிருக்கும். எனவே கீழிருந்து வான்வெளியை அவதானிப்பது என்பது சாத்தியமற்ற விடயம். ஆகவே மேகக் கூட்டத்தை த் தாண்டி வான்வெளிக்கே சென்று அவதானிப்பதே பொருத்தமாக இருக்கும் என்று ஐக்கிய அரபு இராச்சிய ஆய்வாளர்கள் கணித்தார்கள். இதன்படியேவிமானத்திலிருந்த படி விண்ணை ஆராய்ந்து விண்பொருள் எரிவதைப் படம் எடுத்தும் விட்டார்கள். **எப்போதும் யதார்த்தத்தை உணர்ந்து** சிந்திப்பவர்களே வெற்றி பெறுவார்கள் என்பது இதன் மூலம் மீண்டும் ஒரு முறை உறுதியாக உள்ளது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரிஷாவின் 10 வருட சாதனை!

1999 இல் ஜோடி படத்தில் சிம்ரன் தோழியாக ஒரு துணை நடிகையாக சினிமாவுக்கு அறிமுகமானவர் திரிஷா.இரண்டு வருட காத்திருப்புக்குப்பின், மௌனம் பேசியதே படத்தின் மூலம் கதாநாயகி ஆனார். அதன்பிறகு மளமள என்று உயர்ந்தார். தற்போது, தூங்காவனம் படத்தின் மூலம் 50 ஆவது படத்தை நிறைவு செய்திருக்கிறார்.


புதுசு புதுசாக எத்தனை கதாநாயகிகள் வந்தாலும், பத்து வருடங்களாக தாக்குப்பிடித்து நிற்கும் திரிஷாவை மற்ற கதாநாயகிகள் வியப்புடன் பார்க்கிறார்கள். இதுவே இவருடைய சாதனையாக கருதப்படுகிறது!

# முத்த நாயகி



லிப் லாக் காட்சிகளின் மூலம் ரசிகர்களின் இதயத் துடிப்பை எகிற செய்தவர் அலியா பட். ஹைவே, 2 ஸ்டேட்ஸ் என அலியாவுக்கு இந்தி மட்டுமின்றி இந்தியா முழுவதும் ரசிகர்கள் அதிகம். துறு துறு கண்கள், பக்கத்து வீட்டுப் பெண் தோற்றம், மேக்கப் இல்லாத எளிமை, ரசிகர்களுடன் உலா என அலியா பல இளசுகளின் நெஞ்சங்களை கொள்ளையடித்து கொண்டிருக்கிறார்.

அலியா பட்டின் புகழ் தற்போது லிப் லாக் காட்சிகளால் அதிகரித்த வண்ணமே இருக்கிறது. தொடர்ச்சியாக நடிக்கும் படங்களில் நடிகர்களுடன் லிப் லாக் முத்தக்காட்சிகளை அவரே கேட்டு வாங்கி நடிக்கிறாராம்.



# ஆர்யாவை அசர வைத்த நாயகி

சுப்பிரமணியபுரம் சுவாதி, கலகலப்பான சுபாவம். மனதில் உள்ளதை ஒளிவு மறைவு இல்லாமல் பேசுபவர். படங்களில் அமைதியான கதாபாத்திரங்கள் ஏற்கும் இவர், நிஜவாழ்க்கையில் ஆரவாரமான நகைச்சுவை உணர்வு கொண்டவர்.

கதாநாயகிகளிடம் கலகலப்பாக பழகும் ஆர்யாவையே பட்சன் படப்பிடிப்பையே அசரவைத்தவர், சுவாதி!

சிறுத்தை சிவா...
நடிப்பில், அனிருத்...
அஜித்தின் வேத...
வேதாளம் படம் ஏ...
இருப்பதாக கூறியு...
இதுபற்றி அ...
அளித்துள்ள...
வருகின்றன. ...
வேதாளமாக...
நான் இன்னு...
எது எப்படி...
...பர் வசூ...



# பொங்கலில் களமிறங்கும் படங்கள்

ஒரு வழியாக தீபாவளி வெளியீடு முடிந்து விட்டது.

வேதாளம், தூங்காவனம் இரண்டு பெரிய படங்களும் வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கிறது.

அடுத்தாக அனைவரும் எதிர்பார்க்கும் பெரிய பண்டிகை வெளியீடு பொங்கல் தான்.

இதில் பாலா இயக்கியுள்ள தாரை தப்பட்டை, சுந்தர்.சி இயக்கியுள்ள அரண்மனை 2, சூர்யாவின் 24, விஷாலின் கதகளி ஆகிய படங்கள் பொங்கலில் களமிறங்க உள்ளன.

மேலும் இந்த மாதம் சத்யராஜின் ஒருநாள் இரவில், பாண்டிராஜின் பசங்க 2, அனுஷ்காவின் இஞ்சி இடுப்பழகி, அட்டக்கத்தி தினேஷின் ஒருநாள் கூத்து படங்களும் வெளிவரவுள்ளன.

சிறு... அ...

# முகாமையாளர் மாற்றம்



சமந்தா திடீரென்று தனது முகாமையாளரை மாற்றி விட்டார். தொடர் தோல்விகள் காரணமாக அவருடைய முகாமையாளர் மாற்றப்பட்டதாக சிலர் கூறுகிறார்கள்.

ஒரு நடிகரின் பஞ்சாயத்து காரணமாக முகாமையாளர் மாற்றம் நிகழ்ந்ததாக இன்னும் சிலர் கூறுகிறார்கள்!

# சில்க் ஸ்மிதா வேடம்

மறைந்த கவர்ச்சி நடிகை சில்க் ஸ்மிதா வேடத்தில் த டர்ட்டி பிக்சர் படத்தில் நடித்து பிரபலமானவர் வித்யா பாலன். இந்த படத்தில் நடித்ததற்காக சிறந்த நடிகைக்கான தேசிய விருதையும் பெற்றார். கஹானி படத்தில் தீவிரவாதியாக மாறிய கணவனை தேடிப்பிடித்து கொலை செய்யும் பெண்ணாக வந்தார். தற்போது மறைந்த ஹிந்தி நடிகை கீதா பாலி வேடத்தில் புதுப்பட ஒன்றில் நடித்து வருகிறார்.

ஏற்கனவே தமிழில் வந்த குரு, உருமி படங்களிலும் நடித்து இருக்கிறார். தொடர்ந்து அவருக்கு பிரபலங்களின் வாழ்க்கை கதையை மையமாக வைத்து தயாராகும் படங்களில் நடிக்க வாய்ப்புகள் வருகின்றன.


சுடர் ஒளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அஜித்தின் வேதாளம்

த சிவா இயக்கத்தில் அஜித், லட்சுமி மேனன், ஸ்ருதிஹாசன் உள்ளிட்டோர்
னிருத் இசையமைப்பில் நவம்பர் 10ஆம் திகதி வேதாளம் வெளியானது.
வேதாளம் படம் கலவையான விமர்சனங்களை பெற்று வருகிறது. ஒரு சிலர்
டம் ஏ. வெங்கடேஷ் இயக்கத்தில் சரத்குமார் நடித்த ஏய் படத்தை போன்று
கூறியுள்ளனர்.
ற்றி அறிந்த இயக்குநர் வெங்கடேஷ் தனது முகப்புத்தகத்தில் விளக்கம்
துள்ளார். அவர் , நிறைய தொலைபேசி அழைப்புக்கள், குறுந்தகவல்கள்
றன. உங்க ஏய் படத்தின் கதைதான் புதிய மூலாம் பூசப்பட்டு,
மாகவந்துள்ளது என ஏராளமான நண்பர்கள் கூறினார்கள்.
இன்னும் படம் பார்க்கவில்லை. அதனால் கருத்துக்களை நான் ஏற்கவில்லை.
ப்படியோ, நான் அஜித்தின் ஒரு ரசிகன் என்ற முறையில் மகிழ்ச்சியே....! படம்
வசூல..... அனைவருக்கும் வாழ்த்துக்கள் என்று அவர் கூறியுள்ளார்.




# யுவராஜ் சிங் நிச்சயதார்த்தம்

இந்திய கிரிக்கெட் வீரர் யுவராஜ் சிங், திரைப்பட நடிகை ஹசல் கீச் ஆகியோரின் நிச்சயதார்த்தம் இந்தோனேஷியாவில் உள்ள பாலியில் நடந்தது. இந்திய கிரிக்கெட் வீரர் யுவராஜ் சிங், 33. கடந்த 2007 டுவென்டி-20 உலக கோப்பை தொடரில் 6 பந்தில் 6 சிக்சர் அடித்தவர்.

2011 உலக கோப்பையில் தொடர் நாயகன் விருது வென்றுள்ளார். பின் நுரையீரல் புற்றுநோயால் அவதிப்பட்ட இவர், இதிலிருந்து மீண்டு வந்து 2012இல் மறுபடியும் இந்திய அணியில் இடம் பிடித்தார். தற்போது மோசமான பார்ம் காரணமாக சேர்க்கப்படவில்லை. இவருக்கும், இங்கிலாந்தின் எசக்ஸ் நகரில் பிறந்த நடிகை ஹசல் கீச்சுக்கும் இடையே நேற்று இந்தோனேஷியாவில் உள்ள பாலி தீவில் நிச்சயதார்த்தம் நடந்ததாக கூறப்படுகிறது. இவர்களது திருமணம் அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் திருமணம் நடக்கவுள்ளது.







# று படங்களுக்கும் மோக வரவேற்பு

சினிமாவில் நிறைய மாற்றங்கள் ஏற்பட்டு விட்டன. முன்பெல்லாம் பெரிய செலவில் தயாராகும் படங்கள்தான் ஒடும். ஆனால் இப்போது சிறுமுதலீட்டு படங்களும் ஒடுகின்றன. ரசிகர்கள் கதைகளுக்கே முக்கியத்துவம் அளிக்கிறார்கள். நல்ல கதையம்சம் உள்ள படங்களை ததிரையரங்குக்குப் போய் பார்க்கிறார்கள். இனிமேல் நல்ல கதைகளுடன் வரும் படங்களைத் தான் மக்கள் விரும்புவார்கள். கோடிக்கணக்கில் செலவு செய்து கதை இல்லாவிட்டால் அந்த படங்களை மக்கள் விரும்பமாட்டார்கள்.இவ்வாறு வித்யா பாலன் கூறினார்.

# அனுஷ்காவை கவர்ந்தவர்

நடிகர்களை விட தனக்கான கதாபாத்திரங்களில் மட்டுமே கவனம் செலுத்தி வரும் அனுஷ்கா, சமகாலமாக தன்னுடன் நடிக்கும் நடிகர்களும் திறமையானவர்களாக இருக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறார். அதனால் யாராவது நடிகர்களைச் சந்தித்தால், நாம் ஒரு படத்தில் சேர்ந்து நடிப்போம் என்று கேட்டுக்கொள்கிறாராம். அந்த வகையில், ராணி ருத்ரமாதேவியில் படத்தில் ஒரு முக்கிய வேடத்தில் நடித்த தெலுங்கு நடிகர் அல்லு அர்ஜுனின் நடிப்பை அனுஷ்காவை மிகவும் கவர்ந்து விட்டதாம். அந்த படத்தை படயூனிட்டுடன் அமர்ந்து கண்டுகளித்தபோது, அல்லு அர்ஜுன் நடித்த காட்சிகளைப்பார்த்து விட்டு கைதட்டி ரசித்தாராம் அனுஷ்கா.

அதையடுத்து, ஒருமுறை அல்லு அர்ஜுனை சந்தித்தபோது, ஒரு படத்தில் உங்களுடன் ஜோடி சேர வேண்டும் என்று கேட்டுக்கொண்டாராம் அனுஷ்கா. ஆனால் இந்த செய்தி வெளியில் கசிந்தபோதுதான், ஒரு இயக்குநர் அல்லு அர்ஜுன் நடிக்கும் படத்தில் ஒரு பாட்டுக்கு நடனமாட அனுஷ்காவை அழைத்திருக்கிறார், அதற்கு மறுத்து விட்ட அனுஷ்கா, அவருடன் ஜோடி சேர வேண்டுமென்றால் உடனே ஒப்பந்தம் தருகிறேன். ஆனால் குத்துப்பாட்டுக்கு ஆடும் ஐடியா எதுவுமில்லை என்று கூறிவிட்டாராம். அதன்பிறகுதான் இப்போது அந்தக் குத்துப்பாட்டில் நடனமாட அஞ்சலியை ஒப்பந்தம் செய்திருக்கிறார்களாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெங்காயத்தின் மருத்துவ குணங்கள்!



வெங்காயத்தின் காரத்தன்மைக்குக் காரணம் அதில் 'அலைல் புரோப்பைல் டை சல்பைட்' என்ற எண்ணெயாகும். இதுவே வெங்காயத்தின் நெடிக்கும் நமது கண்களில் பட்டு கண்ணீர் வரவும் காரணமாக இருக்கிறது. சிறிய வெங்காயம், பெரிய வெங்காயம் இரண்டும் ஒரே தன்மையை உடையன. ஒரே பலனைத்தான் தருகின்றன. வெங்காயத்தில் புரதச்சத்துக்கள், தாது உப்புக்கள், விற்றமின்கள் உள்ளன. எனவே நம் உடம்புக்கு இது ஊட்டச்சத்து தருகிறது.

பல நாடுகளில் வெங்காயத்தை மருந்துப் பொருளாகப் பயன்படுத்துகிறார்கள். நமது பாட்டி வைத்தியத்திலும், வெங்காயம் முக்கிய இடம் வகிக்கிறது. விஞ்ஞானிகள் வெங்காயத்தின் மகிமையைப் பாராட்டுகிறார்கள். வெங்காயத்தை எப்படிப் பயன்படுத்தினால், என்ன பலன்கள் கிடைக்கும்?

1. நாலைந்து வெங்காயத்தை தோலை உரித்து அதோடு சிறிது வெல்லத்தைச் சேர்த்து அரைத்து சாப்பிட பித்தம் குறையும், பித்த ஏப்பம் மறையும்.
2. சமஅளவு வெங்காயச் சாறு, வளர்பட்டைச் செடி இலைச் சாற்றை கலந்து காதில்விட காதுவலி, குறையும்.
3. வெங்காயச் சாறு, கடுகு எண்ணெய் இரண்டையும் சம அளவில் எடுத்து சூடாக்கி இளம் சூட்டில் காதில்விட, காது இரைச்சல் மறையும்.
4. வெங்காயத்தைத் துண்டுகளாக நறுக்கி, சிறிது இல்வம் பிசினைத்துள் செய்து சேர்த்து, சிறிது கற்கண்டு தூளையும் எடுத்து, அனைத்தையும் பாலுடன் சேர்த்து சிறிது சாப்பிட எல்லா மூலக் கோளாறுகளும் நீங்கும்.
5. வெங்காய நெடி சில தலைவலிகளைக் குறைக்கும். வெங்காயத்தை வதக்கிச் சாப்பிட **உஷ்ணத்தால் ஏற்படும்** ஆசனக் கடுப்பு நீங்கும்
6. வெங்காயத்தைச் சுட்டு, சிறிது மஞ்சள், சிறிது நெய் சேர்த்து, பிசைந்து மீண்டும் லேசாக சுடவைத்து உடையாத கட்டிகள் மேல் வைத்துக்கட்ட கட்டிகள் உடனே பழுத்து உடையும்.
7. வெங்காயச் சாறு சில வயிற்றுக் கோளாறுகளை நீக்கும். இதை மோரில் விட்டுக் குடிக்க இருமல் குறையும்.
8. வெங்காயச் சாற்றையும், வெந்நீரையும் கலந்து வாய் கொப்பளித்து, வெறும் வெங்காயச் சாறை பஞ்சில் நனைத்து பல் ஈறுகளில் தடவிவர பல்வலி, ஈறுவலி குறையும்.
9. வெங்காயத்தை சமைத்து உண்ண உடல் வெப்பநிலை சமநிலை ஆகும். மூலச்சூடு தணியும்.
10. வெங்காயத்தை அவித்து தேன், கற்கண்டு சேர்த்து சாப்பிட உடல் பலமாகும்.
11. வெங்காயத்தை வதக்கி வெறும் வயிற்றில் சாப்பிட்டுவர நரம்புத் தளர்ச்சி குணமாகும்.
12. வெங்காயத்தை வதக்கி தேன் விட்டு இரவில் சாப்பிட்டு, பின் பசும் பால் சாப்பிட ஆண்மை பெருகும்.
13. படை, தேமல் மேல் வெங்காயச் சாற்றை பூசிவர அவை மறைந்துவிடும்.
14. திடீரென மூர்ச்சையானால் வெங்காயத்தை கசக்கி முகர வைத்தால் மூர்ச்சை தெளியும்.
15. வெங்காயச் சாற்றையும் தேனையும் கலந்து அல்லது வெங்காயச் சாற்றையும், குல்கந்தையும் சேர்த்து சாப்பிட்டால் சீதபேதி நிற்கும்.
16. வெங்காய ரசத்தை நீர் கலந்து குடிக்க நன்கு தூக்கம் வரும்.
17. **பனைமர பதநீரோடு** வெங்காயத்தை நறுக்கிப் போட்டு சூடுபடுத்தி குடித்து வர மேகநோய் நீங்கும்.
18. வெங்காயம், அவரை இலை இரண்டையும் சம அளவு எடுத்து அரைத்துச் சாப்பிட மேகநோய் குறையும்.
19. வெங்காயம் குறைவான கொழுப்புச்சத்து உள்ளது. எனவே குண்டானவர்கள் தாராளமாக வெங்காயத்தைப் பயன்படுத்தலாம்.
20. பச்சை வெங்காயம் நல்ல தூக்கத்தை தரும். பச்சை வெங்காயத்தை தேனில் கலந்து சாப்பிடுவது நல்லது.
21. வெங்காயம் வயிற்றிலுள்ள சிறுகுடல் பாதையை சுத்தப்படுத்துகிறது. ஜீரணத்துக்கும் உதவுகிறது.
22. வெங்காயம் ரத்த அழுத்தத்தை குறைக்கும், இழந்த சக்தியை மீட்கும்.
23. தொடர்ந்து புகைப்பிடிப்பவர்கள் வெங்காயச் சாற்றை நாள் ஒன்றுக்கு அரை அவுன்ஸ் வீதம் மூன்றுவேளை சாப்பிட்டு வர நுரையீரல் சுத்தமாகும்.
24. வெங்காயச் சாற்றுடன், கடுகு எண்ணெய் கலந்து வாயு காரணமாக மூட்டுக்களில் ஏற்படும் வலி நேரத்தில் தடவிவர வலி குணமாகும்.
25. நறுக்கிய வெங்காயத்தை முகப்பரு உள்ள இடத்தில் தேய்த்தால் முகப்பரு நீங்கும்.
26. வெங்காயச் சாற்றோடு சிறிது உப்பு கலந்து அடிக்கடி சாப்பிட்டுவர, மாலைக்கண் நோய் சரியாகும்.



27. வெங்காயச் சாறையும், தேனையும் சம அளவு கலந்து கண்வலிக்கு ஒரு சொட்டுவிட கண்வலி, கண் தளர்ச்சி நீங்கும்.
28. **ஜலதோஷ நேரத்தில் வெங்காயத்தை முகர்ந்தால் பலன் கிட்டும்.**
29. வெங்காயத்தை அரைத்து தொண்டையில் பற்றுப்போட ஏற்படும் தொண்டை வலி குறையும்.
30. பாம்பு கடித்துவிட்டால் நிறைய வெங்காயத்தைத் சாப்பிட வேண்டும். இதனால் விஷம் இறங்கும்.
31. ஆறு வெங்காயத்தை ஐந்நூறு மில்லி நீரிலிட்டு, கலக்கிப் பருக சிறுநீர் கடுப்பு, எரிச்சல் நீங்கும்.
32. வெங்காயம் சோடா உப்பு இரண்டையும் சேர்த்து அரைத்து நாய் கடித்த இடத்தில் தடவி, வெங்காய சாறை குடிக்க நாய் விஷம் இறங்கும். பிறகு வைத்தியரிடம் செல்லலாம்.
33. வெங்காயச் சாறோடு சர்க்கரை சேர்த்துக்குடிக்க மூலநோய் குணமாகும்.
34. கொலறா பரவியுள்ள இடத்தில் பச்சை வெங்காயத்தை மென்றுதின்ன கொலறாவின் தாக்கம் குறையும்.
35. ஒரு பிடி சோற்றுடன் சிறிது உப்பு, நான்கு வெங்காயம் இவற்றை சேர்த்து அரைத்து, ஒரு வெற்றிலையில் வைத்து நகச்சுற்றுள்ள விரலில் காலை, மாலை வைத்துக்கட்ட நோய் குறையும்.
36. சிறிய வெங்காயத்தில் இன்சுலின் உள்ளது. நீரிழிவு நோயாளிகள் இதை அதிகமாகப் பயன்படுத்தலாம்.
37. தலையில் திட்டுத்திட்டாக முடி உதிர்ந்து வழுக்கை விழுந்திருந்தால் சிறு வெங்காயத்தை இரு துண்டாக நறுக்கி தேய்த்துவர முடிவளரும்.
38. காக்காய் வலிப்பு நோய் உள்ளவர்கள் தினசரி ஓர் அவுன்ஸ் வெங்காயச் சாறு சாப்பிட்டுவர வலிப்பு குறையும்.
39. வெங்காயத்தை தினமும் சாப்பிட்டுவர டி.பி.நோய் குறையும்.
40. வெங்காயச் சாற்றோடு சர்க்கரை சேர்த்து சாப்பிட வாதநோய் குறையும்.
41. தேள்கொட்டிய இடத்தில் வெங்காயத்தை நசுக்கித் தேய்க்க விஷம் இறங்கும்.
42. வெங்காயத்தை பசும் தயிருடன் சேர்த்து சாப்பிட்டுவர தாது பலமாகும்.
43. வெங்காயம் சாப்பிட தொண்டை கரகரப்பு நீங்கி குரல் வளமாகும்.
44. தினமும் மூன்று வெங்காயம் சாப்பிட்டுவர பெண்களுக்கு ஏற்படும் உதிரச் சிக்கல் நீங்கும்.
45. **வெங்காயத்தை துண்டு துண்டாக நறுக்கி** விளக்கெண்ணெயில் வதக்கி சாப்பிட, மலச்சிக்கல் குறையும்.
46. வெங்காயத்தை அரைத்து முன் நெற்றி, பக்கவாட்டு நெற்றியில் பற்றுப் போட தலைவலி குறையும்.
47. மாரடைப்பு நோயாளிகள், ரத்தநாள கொழுப்பு உள்ளவர்கள் சின்ன வெங்காயம் சாப்பிடுவது நல்லது.
48. சின்ன வெங்காயச் சாறு கொழுப்பை உடனே கரைக்கும்.
49. வெங்காயத்தை ஒரு மண்டலம் தொடர்ந்து சாப்பிட்டுவர உடல் குளிர்ச்சியும், மூளைப் பலமும் உண்டாகும்.
50. வெங்காயத்தை தெக்கிக் கொடுத்தால் பிள்ளைகள் விரும்பி சாப்பிடுவர். ஊட்டச்சத்து கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஆசாத்




**அ**ண்மையில் மாலைதீவு ஜனாதிபதி மீது மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் கொலை முயற்சி தொடர்பாக மாலைதீவில் வைத்து இலங்கையர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் ஒரு முன்னாள் இராணுவ அதிகாரி எனத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. இந்தச் செய்தியின் பரபரப்பு அடங்குவதற்கு முன்பாகவே மாலைதீவைச் சேர்ந்த ஒரு நபர் இலங்கையில் வைத்து இலங்கையர் ஒருவரால் கொல்லப்பட்டுள்ளார். கொல்லப்பட்டவர் மாலைதீவில் உள்ள ஒரு பாதாள உலகக் கோஷ்டியின் முக்கியஸ்தர் எனவும், ஒரு கோடி இருபது இலட்சம் ரூபா கூலி பேசப்பட்டு இவர் கொலை செய்யப்பட்டார் எனவும் தகவல்கள் வெளிவந்துள்ளன.

கூலிக்குக் கொலைகள் மேற்கொள்ளப்படுவதும், பாதாள உலகக் குழுவினர், போதைவஸ்து வர்த்தகர்கள் ஆகியோரின் கையாள்கள் ஒருவரை ஒருவர் வீதி வீதியாகக் கொன்று போடுவதும் பெரிய ஆச்சரியமான சம்பவங்களல்ல. ஆனாலும் மாலைதீவுடன் தொடர்புடைய இக்கொலைகள், இலங்கையின் கூலிக்கொலைஞர்களின் சாதனைகள் சர்வதேச மட்டத்துக்கும் விரிவடைந்து விட்டதைக் காட்டியுள்ளது. இதில் முக்கிய விடயம் இப்படியான கொலைகளில் கொல்லப்படுபவர்களோ கொல்பவர்களோ, பெரும்பான்மையினர் முன்னாள் ஆயுதப்படையினர் என்பது தான். அதாவது மக்களின் வரிப்பணத்தில் ஊதியம் வழங்கப்பட்டு பயிற்சியளிக்கப்பட்டு சகல வசதிகளும் வழங்கப்பட்ட ஆயுதப் படையினர், இன்று சமூக விரோதச் செயல்களில் முன்னின்று செயற்பட்டு வருகின்றனர். இவை தனிநபர்கள் சார்ந்த தவறுகளா அல்லது இலங்கையின் இராணுவக் கட்டமைப்புக்குள் புரையோடிப் போயுள்ள ஏதோ ஒரு மனித குல விரோதச் சிந்தனைப் போக்கின் பலாபலன்களா என்ற கேள்வியை எழுப்புகின்றது.

இலங்கையின் முன்னணி கராத்தே வீரர் வசந்த பெரேரா அனுராதபுரத்தில் வைத்து படு கொடூரமான முறையில் கொல்லப்பட்டார். இந்தக் கொலை தொடர்பாக 23 பேர் கைது செய்யப்பட்ட போதிலும், இந்தக் கொலையைத் திட்டமிட்டு நடத்தியவர் ஒரு முன்னாள் இராணுவ அதிகாரி எனக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

கடந்த அரசாங்கத்தின் காலத்தில் இடம்பெற்ற அரசியல் வாதிகள், ஊடகவியலாளர்கள் கொலைகளிலெல்லாம் இராணுவத்தினரோ கடற்படையினரோ பங்கு கொண்டிருந்தமை விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது. பிரபல ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க கொலையில் கைது செய்யப்பட்ட இருவரில் ஒருவர் இராணுவ வீரர். பின்பு அவர் குற்றம் சுமத்த ஆதாரங்கள் இல்லை எனச் சட்டமா அதிபரால் தெரிவிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டார். இதே போல் ஊடகவியலாளர் பிரதீப் எக்னெலியகொட கொலை தொடர்பாக ஒரு கடற்படை உயரதிகாரி உட்பட கடற்படையினர் கைது செய்யப்பட்டுள்ளனர். நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் கொலையில் அப்போது துணை இராணுவக் குழுவாகச் செயற்பட்ட பிள்ளையான் உட்பட தமிழீழ மக்கள் விடுதலைப்புலிகள் அமைப்பைச் சேர்ந்த மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

லசந்த விக்கிமதுங்க, பிரதீப் எக்னெலியகொட, நிமலராஜன் போன்ற ஊடகவியலாளர் கடந்த ஆட்சியில் இடம்பெற்ற அதிகார துஷ்பிரயோகம், சட்ட விரோத நடவடிக்கைகள், இனப்பாகுபாடு தொடர்பான பாரபட்ச நடவடிக்கைகள் போன்ற முறைகேடுகளை அம்பலப்படுத்துவதில் முககிய பங்கு வகித்தனர். பல முக்கிய விடயங்கள் தொடர்பாகச் சர்வதேச ஊடகங்களுக்கும் செய்திகளை வழங்கினர். இவை அரசாங்கத்துக்கு பெரும் இக்கட்டான நிலைமைகளை ஏற்படுத்தின. இப்படியான நிலையிலேயே இவர்கள் கொலை செய்யப்பட்டனர். இக்கொலைகளில் நேரடியாக ஈடுபட்டவர்கள் எவராக இருந்த போதும், அவர்கள் வெறும் கூலிக்கொலையாளிகள் எனவும், அவர்களின் பின்னால் சக்தி மிக்க அதிகாரக் கரங்கள் இருந்தன எனவும் மக்கள் நம்பினர்.

யோசப் பரராஜசிங்கம், ரவிராஜ் ஆகியோர் சர்வதேச அளவில் செல்வாக்குப் பெற்ற மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள். அவர்கள் இலங்கையில் கடந்த அரசின் ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களை ஐக்கியநாடுகள் சபைக்கும், சர்வதேசத்துக்கும் கொண்டு செல்வதில் பாரிய பங்காற்றினார்.

ரவிராஜ் கொலை தொடர்பாகக் கைது செய்யப்பட்ட கடற்படை அதிகாரிகளுக்கும், அவருக்குமிடையே தனிப்பட்ட குரோதமோ கொடுக்கல் வாங்கல்களோ இருந்திருக்க முடியாது. இவ்வாறே ஜோசப் பரராஜசிங்கம் கொலை தொடர்பாக கைது செய்யப்பட்ட பிள்ளையானும், அவரின் குழுவினரும் அப்போது துணை இராணுவக் குழுக்களாகச் செயற்பட்டவர்கள் என்பதை நாம் மறந்து விட முடியாது. எனவே யாருடைய தேவைக்களுக்காக இவர்கள் கூலிக் கொலைஞர்களாக செயற்பட்டனர் என்பதை எவருமே புரிந்து கொள்ள முடியும்.

பிள்ளையான் சிவநேசதுரை சந்திரகாந்தன் அண்மையில் கைது செய்யப்பட்ட போது வெளியிட்ட சில தகவல்கள் மிக முக்கியமானவையாகும். அதாவது முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவை கிழக்கு மாகாணத்தில் வைத்துக் கொலை செய்யும் படி கேட்டுக் கொண்டதாகவும், தான் மறுத்து விட்டதாகவும் அவர் தெரிவித்திருந்தார். மேலும் தான் மறுந்த கேட்டுக் கொண்டமைக்கு இணங்க வேறு ஒரு இடத்தில் வைத்து மைத்திரிபாலவைக் கொலை செய்ய முயன்றதாகவும் அது தோல்வியில் முடிந்ததாகவும் அவர் கூறியதாகச் செய்திகள் வெளிவந்தன.

இலங்கை கடந்த அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்திலே பெரும் போதைவஸ்து வர்த்தக மையமாகத் திகழ்ந்ததை சகலரும் அறிவார்கள். சர்வதேசப் போதைவஸ்து வியாபாரிகள் பல அரசியல் வாதிகளுக்கு நிதி வழங்கியமை போன்ற விடயங்கள் அண்மையில் வெளிவந்தன.

பாதுகாப்பு அமைச்சின் கண்காணிப்பு நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா, பாதுகாப்பு மத்திய நிலையத்தின் ஊடகப் பேச்சாளர் லக்ஷ்மன் குலுகல்ல, முன்னாள் பிரதமர் டி.எம். ஜெயரத்தினாவின் பிரத்தியேகச் செயலர் என பெரும் அரசியல் புள்ளிகளின் பெயர்கள் போதை வஸ்து தொடர்பாக வெளிவந்தன.


எவ்வாறு இலங்கை போதை வஸ்து மையமாக விளங்கியதோ அவ்வாறே கூலி கொலைஞர்களை இயக்கும் அதிகாரபீடங்கள் கண்டு பிடிக்கப்பட்டு தண்டிக்கப்படும் வரை இப்படியான அநீதிகள் நிறுத்தப்படுவது சாத்தியம் இல்லை.

**கூலிக்குக் கொலைகள் மேற்கொள்ளப்படுவதும், பாதாள உலகக் குழுவினர், போதைவஸ்து வர்த்தகர்கள் ஆகியோரின் கையாள்கள் ஒருவரை ஒருவர் வீதி வீதியாகக் கொன்று போடுவதும் பெரிய ஆச்சரியமான சம்பவங்களல்ல. ஆனாலும் மாலை தீவுடன் தொடர்புடைய இக்கொலைகள், இலங்கையின் கூலிக் கொலைஞர்களின் சாதனைகள் சர்வதேச மட்டதுக்கும் விரி வடைந்து விட்டதைக் காட்டியுள்ளது. இதில் முக்கிய விட யம் இப்படியான கொலைகளில் கொல்லப்படுபவர்களோ கொல்பவர்களோ பெரும்பான்மை யினர் முன்னாள் ஆயுதப்படையி னர் என்பது தான்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணவன்-மனைவி உறவு பலப்பட ...



கணவன் மனைவிக்கிடையே, திருமணமான புதிதில் இருக்கும் நெருக்கம், நாள்கள் செல்லச் செல்ல குறைந்துவிடும் என்பது பொதுவான கருத்து. இதற்கு காரணம், சரியான, பரஸ்பர புரிதல் இல்லாமையே ஆகும் என்கின்றனர் அனுபவசாலிகள்.

கீழே கூறப்பட்டிருக்கும் கருத்துக்கள், ஆண் பெண் என்ற பாகுபாடில்லாமல் இருவரும் கடைப்பிடிக்க வேண்டிய பொதுவான ஆலோசனைகள்.

- காலையில் எழும்போதே ஒருவருக்கொருவர் புன்னகையுடன் பார்த்துக் கொள்ளுங்கள். காலைவணக்கம் சொல்லிக்கொள்வதில் தவறில்லை.
- வாரத்துக்கொரு முறை குடும்பத்தோடு வெளியில் சென்று வரலாம்.
- மனைவிக்கு அல்லது கணவனுக்கு வேண்டியவர்களிடம் கனிவாக நடந்து கொள்ளுங்கள்.
- அவ்வப்போது சின்னச் சின்ன பரிசுப் பொருள்களை வாங்கிக்கொடுத்து ஆச்சரியப்படுத்துங்கள்.
- எப்போதும் செய்தித்தாள் அல்லது ரீவி பார்த்துக்கொண்டே இருக்காமல், கூடுமானவரை ஒருவருக்கொருவர் முகம் பார்த்து பேச முயலுங்கள்.
- சமையல் முதல் அனைத்து வேலைகளிலும் ஒருவருக்கொருவர் உதவ முற்படுங்கள்.
- சாப்பிடும் தருணங்களில் ரீவி பார்க்காமல் பேசிக்கொண்டே சமையலை ருசித்துச் சாப்பிடுங்கள். அது எதிர் தரப்பினரை திருப்தியடையச் செய்யும்.
- தொடுதல் மிக முக்கியம். தனிமையான தருணங்களில் இடைவெளிகளைக் குறைத்துக்கொள்ளுங்கள். தலைகோதிவிடுவது, மடியில் தலை வைத்துப்படுப்பது, கை கோர்த்துக்கொள்வது போன்ற தொடுதல்கள் நெருக்கத்தை மேலும் வலுப்படுத்தும்.
- எப்படியெல்லாம் இருக்க வேண்டுமென்ற எதிர்காலக் கனவுகள் பற்றி ஒருவருக்கொருவர் பேசுங்கள்.
- இருவருக்கும் பிடித்த, பொதுவான பாடல்கள் சிலவற்றைத் தேர்ந்தெடுத்துக் கேளுங்கள். அது யதார்த்த சூழலில் கேட்கப்படும்போது மனதுக்குள் புன்னகை உண்டாக்கும்.
- ஒருவரின் தேவைகள் என்னவேன்று மற்றொருவர் கேட்கும் முன்பே, அதனைப் புரிந்துகொண்டு நிறைவேற்றுங் கள்.
- வாதம் செய்யும்போதோ, அறிவுரை கூறும்போதோ, ஒருவர் சொல்வதை மற்றொருவர் அசட்டை செய்யரது கவனிக்க வேண்டும்.
- தனக்குப் பிடித்த விஷயங்களை இன்னொருவர் செய்யும்போது மனம் விட்டுப் பாராட்டக் கற்றுக்கொள்ளுங்கள்.






# ரவைத் தோசை



## தேவையான பொருள்கள்

1. ரவை - 400 கிராம்
2. அரிசி மா - 1 மேசைக் கரண்டி
3. மிளகு - 1 தேக்கரண்டி
4. சீரகம் - 1 தேக்கரண்டி
5. கடுகு - 1 தேக்கரண்டி
6. இஞ்சி - சிறிதளவு
7. உப்பு - தேவையான அளவு
8. கறிவேப்பிலை - சிறிதளவு.
9. பச்சை மிளகாய் - சிறிதளவு
10. பெருங்காயத்தூள் - 1/4 தேக்கரண்டி
11. கோதுமை மா - 1 மேசைக்கரண்டி
12. எண்ணெய் - தேவையானது.

## செய்முறை

1. புளித்த மோரில் தண்ணீர் விட்டு உப்புச் சேர்த்துக் கலக்கிக் கொள்ளவும்.
2. நறுக்கிய பச்சை மிளகாய், இஞ்சி, கறிவேப்பிலை ஆகியவற்றை மோரில் சேர்க்கவும்.
3. அதனுடன் வறுத்த ரவை, கோதுமை மா, அரிசி மா ஆகியவற்றைச் சேர்த்து நன்கு கலக்கிக் கொள்ளவும்.
4. வாணலியில் ஒரு தேக்கரண்டி எண்ணெயைக் காய வைத்து அதில் மிளகு, சீரகம், கடுகு ஆகியவை சேர்த்து தாளித்து, பெருங்காயம் சேர்த்துக் கலந்து வைத்த மாவில் சேர்க்கவும்.
6. தோசைக் கல்லை அடுப்பில் வைத்து சூடேறியதும், மெல்லிய தோசைகளாக வார்க்கலாம். மாவை அதிக நேரம் ஊற வைத்தால் தோசை மொறுமொறுப்பாக வராது.
7. விரும்பினால் வெங்காயத்தைப் பொடியாக நறுக்கி மாவில் சேர்த்துத் தோசை சுட்டால் சுவையாகவும் வாசனையாகவும் இருக்கும்.

# உன் அழகின் தொலையும் நான்




அலையின்
அலைக்களிப்புக்கேற்ப
அசைந்தாடும் ஓடம் -
சென்றிடுமே நீர் செல்லும்
வழி எல்லாம் !!!
காற்றின் இசைக்கேற்ப
நீரின் மேல் நடனமாடும் !!!
இயற்கையின் அழகதனை
இன்பமாக ரசித்திட
நமக்கு வழிகாட்டியாக.....
நம்முடன் துணைவனாக !!!
ஓடமே.... உன்
அழகில் தொலைகிறேன் நான் !!!
ஆம் - பிறர் மனம் மகிழ்ந்திட
நீயே ஆகிறாய் -
ஓர் கருவியாய் !!!
உன் தன்னலமில்லா
உள்ளத்தின் - கள்ளமில்லா
அழகில் தொலைகிறேன் நான் !!!

- பி.தமிழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எலுமிச்சையின் மருத்துவப் பயன்கள்



1. எலுமிச்சம் பழச்சாறு அருந்த மலச்சிக்கல் நீங்கும். அதிகதாகம், நாவறட்சி போன்றவை நீங்கும்.
2. எலுமிச்சை சாற்றினைச் சுடுநீரில் கலந்து குடிக்க . அஜீரணம், வயிற்றுப் பொருமல், உணவு உண்ட பின் ஏற்படும் வயிறு ஊதல் அகலும்.
3. ஒரு கரண்டி எலுமிச்சம்பழச் சாற்றுடன் சம அளவு வெங்காய்ச் சாறு கலந்து குடித்து வந்தால் வயிற்றுப் போக்கு நீங்கும்.
4. எலுமிச்சம் பழச் சாற்றில் உப்புச் சேர்த்துச் சாப்பிட உடல் வெம்மை தீரும். வாந்தி நிற்கும்.
5. எலுமிச்சைச் சாற்றை மூக்கில் தேய்த்து உறிஞ்ச மூக்கிலிருந்து இரத்தம் வடிதல் நிற்கும்.
6. படிகாரத்தைப் பொடியாக்கி எலுமிச்சைச் சாற்றில் கலந்து பல் துலக்கினால் பல்லிலுள்ள பழுப்புக் கறைகள் நீங்கும்.
7. எலுமிச்சம் பழத் தோலை அரைத்து நெற்றியில் பற்றுப் போட தலைவலி நீங்கும். தலை குளிர்ச்சியடையும்.
8. எலுமிச்சைச் சாற்றுடன் நுங்கு நீர் கலந்து உடலில் பூசினால் கோடைக்கால வெப்பத் தோல் நோய்கள், அரிப்புகள் மாறும்.
9. மாமரப்பிசின், எலுமிச்சைச் சாறு கலந்து பித்த வெடிப்பில் பூச வெடிப்பு மறையும்.
10. எலுமிச்சைச் சாறு கலந்த நீரால் வாய் கொப்பளிக்க வாய் துர்நாற்றம் போகும்.
11. எலுமிச்சைச் சாதம் வயிற்றுக் கடுப்பை நீக்கும்.
12. எலுமிச்சைச் சாறுடன் இஞ்சிச் சாறு கலந்து சாப்பிட பித்தம், அஜீரணம் அகலும்.
13. எலுமிச்சைச் சாற்றுடன் தேன் கலந்து சாப்பிட உடல் பலம் ஏற்படும். கண் பார்வை சரியாகும்.
14. எலுமிச்சைச் சாற்றுடன் தேன் கலந்து முகத்தில் தேய்த்து சிறிது நேரம் கழித்து கழுவினால் முகச்சுருக்கங்கள் மாறும்.
15. இஞ்சியைத் துண்டுகளாக்கி எலுமிச்சைச் சாற்றில் ஊறவைத்துப் பின் உலர வைத்துச் சாப்பிட்டால் வாய்க்கசப்பு இருக்காது.
16. எலுமிச்சை தோல்களை உலர வைத்துப் பொடியாக்கி, உப்பு கலந்து நல்லெண்ணெய்யில் குழைத்துப் பல் துலக்கினால் பல் பளபளப்பாகும்.
17. எலுமிச்சைத் தோல்களைக் கொண்டு முழங்கை, முழங்கால்களில் தேய்க்க சொரசொரப்பு நீங்கி மென்மையாகும்.
18. தேயிலை வடிசாற்றில், எலுமிச்சைச் சாறு கலந்து தலையில் தேய்த்துக் குளித்து வந்தால் தலைமுடி கருமையாக வளரும்.
19. ஒரு டம்ளர் எலுமிச்சைச் சாற்றில் ஒரு கரண்டி நல்லெண்ணெய் சேர்த்துக் குடிக்க நீர்க்கடுப்பு எரிச்சல் தீரும்.
20. தேநீரில் எலுமிச்சைச் சாறு கலந்து குடிக்கத் தலைவலி நீங்கும்.
21. இளநீரில் எலுமிச்சைச் சாறு கலந்து குடிக்க வயிற்று வலி போகும்.
22. சளி பிடித்துள்ள நேரத்தில் வெந்நீரில் எலுமிச்சைச் சாறு சேர்த்துக் குடித்தால் சளி குறையும்.
23. தேங்காய் எண்ணெய்யுடன் சிறிது எலுமிச்சைச் சாறு கலந்து தலையில் தேய்த்துக் குளித்தால் பொடுகு நீங்கும்.
24. மோரில் எலுமிச்சைச் சாற்றைக் கலந்து குடித்து வந்தால் இரத்த அழுத்தம் குறையும்.
25. எலுமிச்சைச் சாற்றுடன் சிறிதளவு பூண்டுச் சாறு கலந்து தேய்த்து வந்தால் தேமல், படை போன்றவை மறையும்.

# முகப்பருவிலிருந்து தப்பிக்க...



1. முகத்தை அடிக்கடி இளம் சூடான நீரில் கழுவ வேண்டும்.
2. தலையில் பொடுகு இருந்தால் உடனே அதை நீக்க வேண்டும்.
3. எண்ணெய் அதிகமாக உள்ள சோப்புகளைப் பயன்படுத்தக் கூடாது.
4. சந்தனம், வேம்பு, மஞ்சள் போன்ற மருந்துப் பொருட்கள் கலந்த சோப்புகளைப் பயன்படுத்த வேண்டும்.
5. மருத்துவர்கள் ஆலோசனை யின்றி நாமாக மாத்திரை ,மருந்து களைப் பயன்படுத்தக் கூடாது.

# கவிதைப்புனல்

## தனிமை



தனிமை! தனிமை!
மனிதனை மனிதனாக்கும்
கருவறை!
விடைகளைத் தேடும்
வினாச் சாலை!
ஒவ்வொருவருக்கும் ஓர்
அறிவுக்கோவில்!
காதலர்களுக்குக்
கனிவான கனவுதரும்
நித்திரை!
போராடும் வீரனுக்குப்
பயிற்சி தரும் களம்!
கவிஞர்களுக்குக் கவியூட்டும்
கற்பனைக் கூடம்!
கண்டுபிடிப்புகளின் மூலம்!
வெறுமைதான் தனிமை, ஆனாலும்
வெறுமையை
வண்ணங்களால் அலங்கரிக்கக்
கற்றுத்தரும் பலபாடங்களை
தனிமை!

- கவிதாயினி



## விதியின் பெயரில் சதியா?

புத்தகப்பை சுமக்கும்
வயதில்
விதி தடுத்து நிறுத்தியது

மூட்டை சுமக்கும்
எனக்குள்ளேயும்
ஆயிரத்தெட்டு
கனவுகள்

வெள்ளாடை அணிய
ஆசை கொண்டேன்
அழுக்காடை என்
மானத்தைக் காத்தது

என் வயதில் எல்லோரும்
பள்ளிக்குப் போகிறார்கள்
எனக்கு மட்டும்
ஏன் இந்தப் பிறவி?

இரவெல்லாம் இங்கு
இருளாய்
என் உளமெல்லாம்
இங்கு வாழ்விழந்த
வரியாய்

கனவு காண்கிறேன்
அப்துல்கலாமாய்
ஆகாவிட்டாலும் கூட
அறிவுள்ள ஆசாமியாய்
வாழ்வதற்கு

என் வாழ்வுக்குள்
அமைக்கப்பட்டது
அடக்கப்படுவது
விதியா?
விதியின் பெயரில் சதியா?

வே. அகிலேஸ்வரன்,
மருதங்கேணியூர்

## உறங்காத உண்மைகள்...

உள்ளக் கரைதனில் அலைமோதும்
நினைவு அலைகள் - ஊற்றுமே
மனதினை ஆர்ப்பரிக்கும்
பொங்கு கடலாய் !!!
அவற்றுள் சில
கொண்டு செல்லுமே உள்ளமதை
ஆனந்தத்தின் எல்லைக்கு!!!
சில எண்ணங்கள் நினைவுகள் -
நம்மை
விட்டுச் செல்லுமே - இனம் புரியா
துன்பச் சுமைகளோடு !!!
இன்பமும் துன்பமும்
நம்மை வழிநடத்திச் செல்லும்
அனுபவ வழிகாட்டிகளின்
துணைக் கொண்டு !!!
அனுபவங்கள் பசுமையாய்
விரிந்திருக்கும் உள்ளமதில்
என்றென்றும் -
உறங்காத உண்மைகளாய்!!!

- பி.தமிழ்

## மரணம் தின்ற நட்பு

உன்னை
காணாமல் இருந்திருந்தால்
இப்போது
நான் மரண கிராமத்தில்
வாழ வேண்டி இருந்திருக்கும் .
உன்னோடு பேசியதனாலே
தானே என்னை கூட்டிச்செல்ல
வந்த மரணத்தையும்
உன் நட்பு தின்றுவிட்டது.

-த.தர்ஷன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அம்மா என்னை ரயில் முன் தள்ளாதீர்கள்!!

நெஞ்சோடு தான் பெற்ற பிஞ்சுக்குழந்தையை நெருக்கமாய் அணைத்து குஞ்சை காக்கும் கோழியைப் போல் பாசத்தோடு காத்து வரும் தாயன்புக்கு நிகருண்டோ!

உலகமே வெறுத்து ஒதுக்கினாலும், உறவுகள் விட்டு விலகினாலும், வறுமை வந்து வாட்டினாலும் தான் பெற்ற சேயின் மகிழ்ச்சியில் உயிர் வாழ்பவள் தான் தாய்.

இதனால் தான் 'நடமாடும் தெய்வம்' எனத் தாயை சிறப்பித்துக் கூறுகின்றார்கள். ஆனால், இன்று இந்த நிலை மாறி, பெற்ற தாயே பிள்ளைகளுக்கு இயமனாக மாறும் துர்ப்பாக்கிய நிலை உருவாகியுள்ளது.

அன்பான கணவன், அடக்கமான மனைவி, அழகான குழந்தைகள் என்று இருப்பதைக்கொண்டு மன நிறைவோடு யதார்த்தமான குடும்ப வாழ்க்கை வாழ்வதற்குப் பதிலாக பணம், மோக ஆசைகள், ஆடம்பர வாழ்க்கை என்பவற்றுக்கு பின்னால் சென்று இறுதியில் எந்தப் பாவமும் அறியாத அப்பாவிக்குழந்தைகளின் உயிர்களைப் பலியெடுக்கும் அளவுக்கு நிலைமை மோசமாகிக் கொண்டே செல்கின்றது.

சுமித்ரா குமாரி வயது 40 என்ற தாய் மாத்தளை றத்தோட்டை கய்காவெலை என்ற கிராமத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்டவள். இவள் இளம் வயதினிலேயே அபேசேகர (பெயர் மாற்றப்பட்டுள்ளது) என்பவரை திருமணம் செய்து கொண்டு இரு குழந்தைகளுக்கு தாயானாள்.

எனினும் அபேசேகரவுடன் வெகு நாட்கள் வாழும் சந்தர்ப்பம் சுமித்ரா குமாரிக்கு கிடைக்கவில்லை. சுமித்ரா குமாரிக்கும் அபேசேகரவுக்கும் இடையில் இருந்து வந்த கருத்து முரண்பாடுகள் காரணமாக சுமித்ரா குமாரி அவரை விட்டு பிரிந்து இரு பிள்ளைகளுடன் தனியாக வாழும் நிலைக்கு தள்ளப்பட்டாள்.

அதன்பின்னர் எக்காரணம் கொண்டும் சுமித்ரா குமாரி தொடர்பாகவோ, பிள்ளைகள் இருவர் தொடர்பாகவோ அபேசேகர தேடிப்பார்க்கவில்லை.

இந்த நிலையில் தான் கடந்த ஏழு வருடங்களுக்கு முன்னர் சுமித்ரா குமாரி சமந்த (பெயர் மாற்றப்பட்டுள்ளது.) என்பவரை மறுவிவாகம் செய்துகொண்டாள்.

சமந்த ஏற்கனவே திருமணம் செய்திருக்கவில்லை. எனினும், பிள்ளைகளுடன் நிர்க்கதியாக நின்றவளை சமந்த பொறுப்பெடுத்துக்கொண்டான்.

அதன்பின்னர் சமந்தவுக்கும் சுமித்ரா குமாரிக்கும் இடையில் இருந்து வந்த உறவின் அடையாளமாய் சுமித்ரா குமாரி கருவுற்று ஒரு ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தாள்.

எனவே, சுமித்ரா குமாரியின் முதல் கணவரின் இரு பிள்ளைகள், இரண்டாவது கணவருக்கு பிறந்த மகன் தனுஷ்க என்று குடும்பத்தின் உறுப்பினர்கள் அதிகரிக்க, குடும்பத்தின் தேவைகளும் அதிகரித்தன.

இந்த நிலையில், ஆரம்பத்தில் சுமித்ராவுடன் சுமுகமான குடும்ப வாழ்க்கையை நடத்தி வந்த சமந்த நாளடைவில் தனது சுயரூபத்தைக் காட்ட விழைந்தான். மனைவிக் காகவோ, பிள்ளைகளுக்கா கவோ தனது நேரத்தை செலவழிக்கத் தவறினான்.

அதுமட்டுமின்றி தனது குடும்பத்தின் பொறுப்புகளை தட்டிக்கழித்தான். இதனால் குடும்பத்தில் வரவுக்கு மிஞ்சிய செலவுகள் அதிகரிக்க வறுமை தலைவிரித்தாடியது.

இந்த நிலையில் கடந்த சில மாதங்களுக்கு முன்பு மாத்தளை இறத்தோட்டை கய்காவெலை கிராமத்திலிருந்து கண்டி பொலிஸ் நிலையத்துக்கு அருகிலுள்ள லமாகார மாவத்தையிலுள்ள வாடகை அறையில் தங்குவதற்கு அவர்கள் வந்தார்கள்.

அந்த அறைக்கு வாடகை பணமாக ரூபா இரண்டாயிரம் மாதா மாதம் செலுத்த வேண்டும். எனினும், அந்தப் பணத்தை செலுத்துவது என்பதே பெரும் போராட்டமாகவிருந்தது. சமந்த அறைக்கான வாடகை பணத்தை கொடுப்பது தாமதமாகியது.

இதனால் சுமித்ரா பெரும் போராட்டத்துக்கு மத்தியிலேயே அவனிடமிருந்து ஒவ்வொரு மாதமும் பணத்தை பெற்று உரிமையாளருக்கு கொடுப்பாள்.

அதுமட்டுமின்றி, வீட்டு செலவுகளுக்கு சமந்த சரியாக பணம் கொடுக்க தவறினான். இதனால் பல நாட்கள் பிள்ளைகள் பட்டினியுடனே இருந்தார்கள்,

எனவே, சுமித்திராவை பொறுத்தவரை அவளுக்கு பணம் ஒரு பெரும் பிரச்சினையாக விருந்தது. தனது குடும்பத்தின் அன்றாட செலவுகளை சமாளிக்க பலரிடம் கையேந்தினாள்.

இதனால் பலரும் அவளை ஏளனமாக பார்த்தார்கள். மேலும் சுமித்ரா பெரும் மன அழுத்தத்துக்கு ஆளாகினாள். தனது கணவரின் மேல் இருந்த ஆத்திரம், கோபம், ஏக்கம் அத்தனையும் ஒட்டுமொத்தமாக பிள்ளைகள் மீது காட்ட ஆரம்பித்தாள்.

பிள்ளைகளை அடி, உதை என்று சித்திரவதை செய்வதுடன் நின்றுவிடாது கெட்ட வார்த்தை களால் அவர்கள் மனதை காயப்படுத்தினாள். அதுவும் சமந்தவுக்கும் தனக்கும் பிறந்த இளைய மகன் தனுஷ்க மீது சற்று அதிகமாகவே தனது கோபத்தை வெளிப்படுத்தினாள்.

இதனால் சிறுவன் தனுஷ்க உளரீதியாக பெரிதும் பாதிக்கப்பட்டான். அவனுடைய பல இரவுகள் நிம்மதியற்ற இரவுகளாகவே தொடர்ந்தன.

இந்த நிலையில் சமந்த திடீரென தலைமறைவாகினான். எங்கு தேடியும் அவன் பற்றிய எந்தவிதமான தகவல்களும் கிடைக்கவில்லை. சுமித்ராவின் கையிலும் செலவுக்கு பணம் இருக்கவில்லை.

இதனால் பெரும் குழப்பத்திலிருந்த சுமித்ரா கடந்த நான்காம் திகதி இளைய மகன் தனுஷ்க அதிகாலை பாடசாலைக்கு செல்ல ஆயத்தமாகிக் கொண்டிருந்த வேளை நீ இன்று பாடசாலைக்கு செல்லத் தேவையில்லை.

வா! உன் அப்பாவை தேடுவோம் என்று கூறி அழைத்தாள். எனினும் தனுஷ்க பாடசாலை செல்ல இருந்த ஆர்வத்தில் நான் வரவில்லை அம்மா என்று பதிலளித்தான்.

எனினும், சுமித்ரா விடுவதாய் இல்லை. வா, வா போவம் என்று அவனுடைய கைகளை பிடித்து தரதரவென்று இழுத்தவாறே அழைத்துச்சென்றாள்.

இதனை அவதானித்த அக்கம் பக்கத்தில் வசித்தவர்களும் இன்று அதிகாலையிலேயே போராட் டத்தை ஆரம்பித்து விட்டாள் போல என்று தங்களுக்குள் அவளை ஏளனமாகப் பார்த்து முணுமுணுத்துக்கொண்டு சென்றார்கள்.

அதன்பின்னர் தனுஷ்கவின் கைகளை பலமாக பிடித்து இழுத்து சென்றவள் நேராக கண்டி மத்திய சந்தை பகுதிக்கு அருகிலுள்ள புகையிரத தண்டவாளத்துக்கு அருகில் சென்று நின்றாள். அந்த நேரம் கண்டியிலிருந்து மாத்தளை நோக்கிச் செல்லும் புகையிரதம் வரும் நேரம்.

எனவே, புகையிரதம் அவ் விடத்தை அண்மிக்கும் தருவாயில் நீயும் வேண்டாம் உன் அப்பாவும் வேண்டாம் செத்து ஒழிந்துவிடுங் கள். உங்களை வைத்துக் கொண்டு எனக்கு பெரும் தொந்தரவாக விருக்கின்றது. என்று கூறி வரும் புகையிரதத்துக்கு முன்னால் தனுஷ்கவை தள்ள முயற்சித்தாள்.

தனுஷ்க செய்வதறியாமல் தவித்தான். ஐயோ அம்மா, எனக்கு பயமாகவிருக்கின்றது. நான் பாடசாலைக்கு செல்ல வேண்டும். என்னை விடுங்கள் என்று பலமாக கத்திக் கூச்சலிட்டான். எனினும், சுமித்ராவின் மனம் சிறிதும் இரங்கவில்லை.

இறுதியில் தனுஷ்க ஐயோ என்னைக் காப்பாற்றுங்கள். அம்மா என்னை ரயில் முன்னால் தள்ளிக் கொலை செய்ய பார்க்கின்றாள். என்று பலத்த குரலில் கத்தினான்.

இதனிடையே, அவ்வழியாக வந்த கர்ப்பவதியான கண்டி சிறுவர் மற்றும் பெண்கள் பாதுகாப்பு பொலிஸ் பிரிவைச் சேர்ந்த பெண் பொலிஸ் அதிகாரி தூரத்திலிருந்தவாறு இச்சம்பவத்தை கண்ணுற்று சம்பவ இடத்துக்கு விரைந்து வந்தார்.

வந்தவர் தனது பாதுகாப்பு அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு ரயிலின் முன்னால் கையை உயர்த்தி ரயிலை நிறுத்தி சிறுவனை காப்பாற்றினார். இதன்போது அவர் தனது நிலையையும் மறந்து சிறுவனைக் காப்பாற்ற முயற்சித்தார்.

(இத்தருணத்தில் அவர் பொலிஸ் சீருடை அணிந்திருக்க வில்லை காரணம் பொலிஸ் சேவையிலுள்ள பெண் பொலிஸ் அதிகாரி கர்ப்பமுற்றிருக்கும் போது பொலிஸ் சீருடை அணியவேண்டிய கட்டா யம் இல்லை.)

இது தொடர்பாக சுமித்திராவை பொலிஸார் கைதுசெய்து விசாரித்தபோது நான் ரயில் வருவதை அவதானிக்கவில்லை. இந்த பிள்ளையின் அப்பா எனக்கு சாப்பிடுவதற்கு கூட எதுவும் கொண்டு வருவது இல்லை.

பல நாட்களாக நானும் எனது பிள்ளைகளும் பட்டினியில் கிடக்கின்றோம். ஒரு வாரமாய் அவர் எங்கு இருக்கின்றார். என்றே தெரியவில்லை. நான் எப்படி தனியாக குடும்பத்தை கொண்டு செல்வது என்று அழுது புலம்பினாள்.

**- வசந்தா அருள்ரட்ணம்**

மேலும், சிறுவன் தனுஷ்கவிடம் பொலிஸார் இது தொடர்பாக விசாரித்த போது'

'நான் இனி மேல் அம்மாவுடன் போக மாட்டேன். என்ன காரணம் என்று தெரியவில்லை. அம்மா சதா என்னை திட்டிக்கொண்டே இருப்பார்.

அதுவும் தகாத வார்த்தைகளால் திட்டுவார். அன்று என் கைகளை பிடித்து இழுத்து வந்து ஓடும் ரயிலில் தள்ளப் பார்த்தார். எனக்கு பயமாகவிருந்தது. எனது அப்பாவும் என்ன செய்கின்றார் என்றே எனக்கு தெரியவில்லை.

நான் இனிமேல் வீட்டுக்கு செல்ல மாட்டேன். எனக்கு பாடசாலை செல்ல விருப்பமாகவிருக்கின்றது' என்றெல்லாம் கூறி அழுதான்.

இந்தநிலையில், இன்று தனுஷ்க டிக்கிரி சிறுவர் இல்லத்துக்கு அனுப்பி

(22ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வார

# இராசி பலன்

**18.11.2015 ~24.11.2015**

**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்**

**மேஷம்** புத்திரர், உங்கள் வழிகாட்டுதல்களை ஏற்று செயல்படுவர். உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். ஆரோக்கியம் பலம் பெறும். மனைவியின் செயல்பாட்டால் குளறுபடி உருவாகலாம். தொழில், வியாபாரத்தில் சுமாரான ஆதாயம் கிடைக்கும். பணியாளர்கள், நிர்வாகத்தின் சட்டதிட்டம் உணர்ந்து செயல்படவும்.

**கார்த்திகை 2, 3, 4ஆம் பாதங்கள்**

**ரிஷபம்** புத்திரர்களின் பிடிவாதம் கண்டு கோபப்பட வாய்ப்புண்டு. பணம் விஷயத்தில் விழிப்புடன் இருப்பது நல்லது. மனைவி பெருந்தன்மை குணத்துடன் நடந்து கொள்வார். தொழில், வியாபாரத்தில் மிதமான லாபம் கிடைக்கும். பணியாளர்கள், பணி தவிர்த்த பிற விஷயத்தில் ஈடுபட வேண்டாம். வெளியூர் பயணம் பயன் அறிந்து மேற்கொள்ளவும். பெண்கள், வீட்டுச் செலவில் சிக்கனம் பின்பற்றுவர். மாணவர்கள், படிப்பில் கூடுதல் கவனம் செலுத்துவது அவசியம்.

**மிருகசீரிடம் 3, 4ஆம் பாதங்கள்**

**மிதுனம்** ஆரோக்கியம் பலம் பெறும். வழக்கு விவகாரத்தில் சாதகமான முடிவு கிடைக்கும். மனைவி அன்பைக் கண்டு மனம் மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் விற்பனை சிறந்து லாபம் அதிகரிக்கும். பணியாளர்களுக்கு எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். பெண்கள், தாராள பணச் செலவில் குடும்பத் தேவையை நிறைவேற்றுவர். மாணவர்கள், விரும்பிய பொருளை பெற்றோரிடம் கேட்டு வாங்குவர்.

**புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்**

**கடகம்** பிள்ளைகளின் செயல்பாடு பெருமையளிக்கும். அக்கம் பக்கத்தினர் அன்பு பாராட்டுவர். மனைவியின் நற்செயல்களை முழு மனதுடன் பாராட்டுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இடையூறு நீங்கி வருமானம் உயரும். பணியாளர்களுக்கு அதிர்ஷ்டவசமாக சலுகை கிடைக்கும். பெண்கள், உறவினர் குடும்பத்தில் சுப நிகழ்ச்சியில் பங்கேற்று மகிழ்வர்.

**மகம், பூரம், உத்திரம் 1ஆம் பாதம்**

**சிம்மம்** புத்திரர் படிப்பு, வேலைவாய்ப்பில் முன்னேறுவர். வெளியூர் பயணத்தின் போது விழிப்புடன் இருப்பது அவசியம். மனைவி குடும்ப நலனில் அக்கறை கொள்வார். தொழில், வியாபார வளர்ச்சிக்கு புதியவர்களின் ஆதரவு துணை நிற்கும். பணியாளர்களுக்கு புதிய வேலைவாய்ப்பும், உபரி வருமானமும் கிடைக்கும்.

**உத்திரம் 2, 3, 4ஆம் பாதங்கள்**

**கன்னி** உடல்நலனில் கவனம் செலுத்துவது நல்லது. மனைவியால் குடும்பத்தில் ஒற்றுமை சிறக்கும். தொழில், வியாபாரத்தில் வருமானம் சுமாராக இருக்கும். பணியாளர்களுக்கு விண்ணப்பித்த கடனுதவி கிடைக்கும். பெண்கள் தெய்வ வழிபாட்டில் ஈடுபாடு கொள்வர். மாணவர்கள் புதிய நண்பர்களிடம் விழிப்பாக இருக்கவும்.

**சித்திரை 3, 4ஆம் பாதங்கள்.**

**துலாம்** அலைச்சல், நீண்ட தூர பயணத்தை தவிர்க்க முயலுங்கள். பிள்ளைகளின் ஆர்வம் மிகுந்த செயல் நிறைவேற உதவுவீர்கள். எதிரி இருந்த இடம் தெரியாமல் விலகுவர். மனைவி வழி உறவினர்களின் அன்பு கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி படிப்படியாக உருவாகும். பணியாளர்கள் கூடுதல் வேலை வாய்ப்பை ஏற்று வருமானம் காண்பர். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்கி மகிழ்வர்.

**விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

**விருச்சிகம்** பிள்ளைகளின் எதிர்கால நலனுக்கு தேவையானதை செய்வீர்கள். பூர்வீகச் சொத்து வகையில் மராமத்து செலவு ஏற்படும். சுற்றுலா சென்று வர திட்டமிடுவீர்கள். பகைவர் உங்களின் வளர்ச்சி கண்டு வியப்பில் மூழ்குவர். மனைவி வழி உறவினர்களால் நன்மை உண்டு. தொழில், வியாபாரத்தில் புதிய உத்தியால் ஆதாயம் அடைவீர்கள். பணியாளர்கள் எதிர்பார்த்த சலுகை கிடைக்கும்.

**மூலம், பூராடம், உத்திராடம் 1ஆம் பாதம்**

**தனுசு** பணம் கொடுக்கல், வாங்கலில் விழிப்புடன் இருக்கவும். மனைவி உங்களின் நல்ல குணம் உணர்ந்து பெருமிதம் கொள்வார். அரசு வகையில் உதவி கிடைப்பதில் தாமதம் ஏற்படும். தொழில், வியாபாரத்தில் சுமாரான லாபம் கிடைக்கும். பணியாளர்கள் சக ஊழியர்களிடம் விவாதம் பேச வேண்டாம். பெண்கள் பிறருக்காக பணப் பொறுப்பு ஏற்பது கூடாது. மாணவர்கள் நன்றாக படித்து, பாராட்டு பெறுவர்.

**உத்தராடம் 2,3,4ஆம்பாதங்கள்.**

**மகரம்** விருந்து, விழாவில் அடிக்கடி கலந்து கொள்வீர்கள். மனைவி உங்கள் எண்ணத்திற்கு ஏற்ப நடந்து கொள்வார். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை அதிகரித்து வருமானம் உயரும். பணியாளர்கள், புதிய தொழில் நுட்பங்களை ஆர்வமுடன் கற்பர். பெண்கள், குடும்ப நலனை கருத்தில் கொண்டு செயல்படுவர். மாணவர்கள் முயற்சியுடன் படித்து முன்னேறுவர்.

**அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள்.**

**கும்பம்** உறவினர்களுடன் சந்திப்பால் சந்தோஷம் காண்பீர்கள். வாகன பயன்பாட்டால் நன்மை உண்டாகும். புத்திரர் அறிவார்ந்த செயலால் பெருமை தேடித் தருவர். கடனாக கொடுத்த பணம் திரும்ப கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் உழைப்புக்கேற்ப வருமானம் உண்டாகும். பணியாளர், எதிர்பார்த்த சலுகை கிடைக்கும்.

**பூரட்டாதி 4ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

**மீனம்** பிள்ளைகள் பிடிவாதத்துடன் செயல்படலாம். சத்தான உணவும், சீரான ஓய்வும் ஆரோக்கியத்தை பாதுகாக்கும். எதிரிகளிடம் இருந்து விலகி இருப்பது நல்லது. மனைவியின் குறையை பெரிதுபடுத்தி பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் மூலதனத்தை அதிகப்படுத்த வேண்டாம். பணியாளர்கள் பணிச் சுமையால் அவதிப்பட நேரிடும்.

# சுதந்திர வேட்கை

● அடேல் பாலசிங்கம்

## விடுதலைப் போராட்டம் பற்றிய ஒரு பதிவு 112



இந்த இறுதி முடிவு பற்றிக் கேள்விப்பட்டதும் பிரபாகரன் அடக்க முடியாச் சினம் கொண்டார். தடுப்புக் காவலில் உள்ள தம் போராளிகளின் இறுதி விருப்பத்தை நிறைவேற்றுவது தமது கடைமை என்று அவர் உணர்ந்தார். பிரபாகரனும் அவருடைய தளபதிகளும் தங்கள் கழுத்தில் இருந்த சயனைட் குப்பிகளைக் கழற்றி, பாலாவின் கழுத்திலும், மாத்தையாவின் கழுத்திலும் சூட்டினார்கள். காவலில் இருக்கும் போராளிகளிடம் அவற்றை ஒப்படைக்குமாறு ஆணையிடப்பட்டது. போராளிகள் கொண்டு செல்லப்படும் நாளன்று.தயக்கத்தோடும், மனமின்றியும் , சயனைட் குப்பிகளைக் கழுத்திலே மாலையாக அணிந்த வண்ணம் , பாலாவும் , மாத்தை யாவும் அவர்களைப் போய்ச் சந்தித்தார்கள். குமரப்பா தமது மனைவிக்கென்று சில பணிப்புரைகளைத் தெரிவித்தார். புலேந் திரனும் தமது மனைவிக்குச் செய்தி வழங்கினர். திருமணமாகி இரண்டு சின்னஞ்சிறு குழந்தைகளுக்குத் தந்தையாக இருந்த கரன் , தமது பிள்ளைகளின் எதிர்காலம் பற்றிய ஆவலை வெளியிட்டார். விடுதலைப்புலிப் போராளிகளின் முடிவு இதுவே என்றாயிற்று. கொழும்புக்கு விமானம் புறப்பட இன்னும் சில நிமிடங்களே இருந்த போது, குமாரப்பாவும், புலேந்திரனும் அவர்களுடைய கூட்டாளிகள் பதினைந்து பேரும் ஒரே வேளையில் குப்பி கடித்தார்கள். அவர்களைச் சூழ நின்ற அரச படையினர் தம் கண்முன்னே நிகழும் விபரீதத்தைக் கண்டதும் அவர்கள் மீது ஆத்திரத்துடன் பாய்ந்து கூட்டுத் தற்கொலையைத் தடுக்க வேண்டும் என்ற நோக்கோடு துப்பாக்கி முனைகளால் அவர்களை அடித்துத் தாக்கியிருக்கிறார்கள். ஆனால் கணப்பொழுதினுள் எல்லாமே முடிந்து விட்டது. குமாரப்பா, புலேந்திரன் உட்பட பன்னிரெண்டு போராளிகள் அதே இடத்தில் உயிர்ப் பலியாகினார்கள். ஐந்து பேர் இதிலிருந்து மீட்கப்பட்டு மருத்துவமனையில் உயிர் பிழைத்தார்கள்.

விடுதலைப்புலிப் போராளிகளின் கூட்டுத் தற்கொலைச் செய்தி பொதுமக்களுக்கும், எனக்கும் அறிவிக்கப்பட்டது. ஒக்ரோபர் 5, மாலையிலேயே வல்வெட்டித்துறையில் உள்ள விடுதலைப்புலித் தளத்தில் இருந்து "வாக்கி ரோக்கி" மூலம் செய்தி அறிவிக்கப்பட்டது. அழுத்தம் திருத்தமாக ஆறுதலாக பெயர்கள் படிக்கப்பட்டன. "குமாரப்பா , போய்விட்டார். புலேந்தி அம்மன் போய்விட்டார்..." அதன் பின் ஒவ்வொருவரும் பெயராக , இந்த அவலத்தின் பெயர்ப்பட்டியல் முழுமையாக , படிக்கப்பட்டது. எனது செவிகளையே நம்ப முடியாதவளாக விக்கித்துப் போய் உட்கார்ந்தேன். இது எப்படி நடந்திருக்கலாம்? இது உண்மையாக இருக்க முடியாது. என்ன நடந்தது? அதன் பின் தூரத்தில் இருந்து ஒரு கால் மைல் தூரத்தில் குமாரப்பாவின் மனைவிக்கு தகவல் தரப்பட்டிருக்கிறது. இன்னொரு பக்கத்தில் இருந்து வருத்தமும் துயரமும் கலந்த உணர்ச்சி ஒப்பாரி ஓவென்று கேட்டது. இன்னொரு குடும்பத்துக்குத் தகவல் அதன் பின் இன்னொன்று; இன்னொன்று; இப்படியே கிராமம் முழுவதும் , திறந்த ஒரே சொந்த வீடாக ஒப்பாரி ஓலம் ஓங்கியது.

தமிழ்ச் சமுதாய மரபுப்படி, மக்கள் செத்த வீட்டுக்குப் போய் இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தி, அவருடைய குடும்பத்துக்கு ஆறுதல் கூறுவது மரபு. ஒருவரை ஒருவர் நன்கு அறிந்த வல் வெட்டித்துறை போன்ற சிறிய கிராமத்தில் அது பொதுவான ஒன்று.

**(பதிவு தொடரும்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் உலகம்

## பட்டம்



சின்னச் சின்ன பட்டமாம்
சிங்காரப் பட்டமாம்
அண்ணன் செய்த பட்டமாம்
அருமையான பட்டமாம்

வட்டமான பட்டமாம்
வாலிருக்கும் பட்டமாம்
கிட்டவராப் பட்டமாம்
காற்றிலாடும் பட்டமாம்

பச்சை வண்ணப் பட்டமாம்
பறக்கும் நல்ல பட்டமாம்
அச்சமின்றிக் காற்றிலே
ஆடும் நல்ல பட்டமாம்

உயரப் போகும் பட்டமாகும்
ஊசலாடும் பட்டமாம்
துயரமின்றி ஆடுமாம்
துள்ளி வானில் ஓடுமா

## நிலைக்கண்ணாடி

பா ப்பாங்குளம் என்னும் ஊரில் வளர்ந்த சிறுவன் ஜான், தன் தாயுடன் பட்டணத்துக்கு வந்தான். இருவரும் தங்கள் உறவினர் வீட்டில் தங்கினர். அந்த வீட்டின்அறை ஒன்றில் பெரிய நிலைக் கண்ணாடி ஒன்று இருந்தது. ஜான் அதைக் கண்டு வியப்பில் ஆழ்ந்தான். அதுவரை முகம்பார்க்கும் கண்ணாடியை அவன் பார்த்ததே இல்லை. கண்ணாடியில் ஒரு சிறுவன் உருவத்தைக் கண்டபோது அவனுக்கு மகிழ்ச்சியாயிருந்தது. அதையே ஆச்சரியத்துடன் கண்கொட்டாமல் பார்த்தபடி இருந்தான்.



ஜானுக்கு ஒரு ஆசை வந்தது. தனக்குப் பிடித்த அந்த உருவத்தைத் துன்புறுத்திப் பார்க்க விரும்பினான். உடனே தன் முகத்தைக் கோணலாகக் காட்டினான். கண்ணாடியில் இருந்த உருவமும் அப்படியே பிரதிபலித்தது. ஜானுக்கு தாங்க முடியாத கோபம் வந்தது. கையால் குத்துவது போலக் காட்டினான். கண்ணாடியிலும் அப்படியே தெரிந்தது.


சினம் மிகுந்த ஜான், அந்த உருவத்தைக் குத்துவதுபோல் செய்தான். அதுவும் அப்படியே செய்தது. ஆத்திரத்தோடு கண்ணாடியைப் பார்த்துக் கத்தினான். ஜான் பின்பு அழுதான். மீண்டும் அடித்தான். அவனுக்குக் கைவலித்தது. ஜான் செய்த அனைத்தையும் அந்தக் கண்ணாடிப் பிம்பமும்செய்தது. மகனின் சத்தம் கேட்டு அம்மா அங்கு வந்தாள். அவனை அழைத்து கண்ணீரைத் துடைத்துத் தேற்றினாள். கண்ணாடியில் தெரிந்த பையனிடம், "உன் முகத்தைக் கோணலாகக் காட்டினாயா?" என்றாள்.

"ஆமாம்"! என்றான்.

"மறுபடியும் அவன் எதிரில் போ! நீ சிரி. அவனும் சிரிப்பான். உன் கையை நீட்டு அவனும் நீட்டுவான். நீ சினம் கொள்ளாதே. அவனும் சினம் கொள்ள மாட்டான்" என்று சொன்னாள் அம்மா. ஜானும் அம்மா சொன்ன படி செய்தான். கண்ணாடியில் தெரிந்த உருவமும் அப்படியே செய்தது. அதைக் கண்டு ஜான் பெருமகிழ்ச்சி அடைந்தான்.

ஜான் நாம் செய்யும் நன்மை, தீமைகள் நமக்கே திரும்பி வரும். உலகம் கண்ணாடியைப் போன்றது. இதை நன்கு புரிந்து கொள், என்று கூறி நிலைக்கண்ணாடியை பற்றி விளக்கினாள் அம்மா. அன்றிலிருந்து ஜான் மற்றவர்களுக்கு நன்மைகளை மாத்திரமே செய்தான்.

## எந்த வழி சிறந்தது?



நரி பூனையிடம் தற்பெருமை பேசிக்கொண்டது. எனக்குப் பகைவர்களிடமிருந்து தப்பிக்க நூறு தந்திரங்கள் தெரியும். உனக்கு எத்தனை தந்திரங்கள் தெரியும்?

எனக்கு ஒரே ஒரு தந்திரம்தான் தெரியும். என்றது பூனை. அப்போது பெரிதாகச் சத்தம் ஒன்று கேட்டது. ஓநாய்களும், வேடர்களும் துரத்தி வரும் இரைச்சல் கேட்டது. பூனை உடனே அங்கிருந்த மரத்தில் பாய்ந்து உச்சியில் ஏறிக்கொண்டது.

நரிக்கு தன் நூறு தந்திரங்களில் எந்தத் தந்திரத்தைப் பயன்படுத்துவது என்ற யோசனையில் காலதாமதமாகியதால் எதிரி விலங்குகளிடம் மாட்டிக்கொண்டு உயிர் துறந்தது.

சந்தேகத்துக்குரிய நூறு வழிகளை விட பாதுகாப்பான ஒரு வழியே சிறந்தது..

## வர்ணம் தீட்டுவோம்



இந்த இரு படங்களிலும் உள்ள வித்தியாசங்களைக் கண்டு பிடியுங்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வீகசிகாமணி

சிறுகதை



# அம்மா மனசு.....

மஞ்சுவும், சாமிநாதனும் ஒரு கணிப்பொறி கருவியை வைத்துக் கொண்டு வட்டிக்கணக்குப் பார்த்துப் பார்த்து அலுத்துப்' போய்விட்டனர். ரூபாய் பதின்மூன்று லட்சத்து ஐம்பதாயிரத்துக்கு பதினைந்து வருடத் தவணையில் பதினெட்டு சதவீதம் வட்டிக்கு மாதத்துக்கு எவ்வளவு ரூபாய் வருகிறது என்பதைத் தான் கணக்குப் போட்டுக் கொண்டிருந்தார்கள். மஞ்சுவுக்கு ஒரு தொகை வந்தால், சாமிநாதனுக்கு வேறு ஒரு தொகை வருகிறது. விளைவு? வாய்த் தகராறு தான் மிச்சம். இரண்டு மூன்று நாள்களாக இரவில் படுக்கப் போகும் முன்பு இவர்களுக்கு இதே வேலையாகி விட்டதை உணர்ந்த சாமிநாதனின் அம்மா சிவகாமிக்கு மருமகள் மஞ்சு மீது எரிச்சல் வரவே, ஏண்டா... சாமிநாதா நீங்கள் வீடு வாங்கறதுக்குள்ள நாமெல்லாம் ஒரு வழியாக ஆகிடுவோம் என நினைக்கிறேன். தினம் எனக்கு இந்த தலைவலி தாங்க முடியவில்லை... இந்த வயதான காலத்திலையும்...

சிவகாமி இப்படி அலுத்துக் கொள்வதில் நியாயம் இருக்கத்தான் செய்தது.

சாமிநாதன் ஐம்பது வயதாகியும் இன்னும் பதவியுயர்வு ஏதுமில்லாமல் சாதாரண அரசாங்க அதிகாரியாகத்தான் இருக்கிறான். மஞ்சுவோ ஒரு தனியார் நிறுவனத்தில் வேலை பார்க்கும் எழுதுவினைஞர். அவள் சம்பளம் மாதம் மூவாயிரத்தைத் தாண்டாது.

எப்படியோ தங்கள் மகன் கண்ணன் அதிக புள்ளிகள் வாங்கியதால் குறைந்த செலவிலேயே பொறியியல் கல்லூரியில் சேர்த்து விட்டார்கள். ஒரே மகளான புவனாவும் கா.பொ.த உயர்தரம் படித்துக் கொண்டிருக்கிறாள். கணவன், மனைவியின் மொத்த வருமானமே மாதச் செலவுக்கு சரியாகி விடுகிறது. கலர் கலர் பட்டுப் புடவைகளெல்லாம் மஞ்சுவின் கனவில்தான் வந்து போயின.

ஏற்கனவே இருந்த சொந்த வீட்டையும் சாமிநாதனின் அப்பா அந்த காலத்தில் பட்ட கடன்களை அடைப்பதற்காக விற்றாகி விட்டது. இப்போது திடீரென எப்படியாவது ஒரு சொந்த வீடு நமக்கு இருக்க வேண்டும் என்ற வெறியில், சிறுக்குப் பிடித்தவன் போல் கடந்த ஒரு வருடமாக எல்லா வங்கிகள், நிதி நிறுவனங்கள் படி ஏறி இறங்கிய வண்ணமிருந்தான் சாமிநாதன். இதையெல்லாம் பார்த்து சிவகாமியும் கடவுளை வேண்டாத நாளில்லை.

அதில்லேம்மா... வீட்டோட விலை ரூபாய் பதின்மூன்று இலட்சத்து ஐம்பதாயிரம் ஆகிறது. முதல்ல முன்று இலட்சம் கட்டச் சொல்கிறார்கள்... மிகுதியை பதினைந்து வருடத் தவணையிலே ' திருப்பிச் செலுத்த வேண்டும். அதுக்கு வட்டியோட மாதம் மாதம் கிட்டத்தட்ட பதினைந்தாயிரம் கட்ட வேண்டும். கணக்குப் பார்த்தால் கடைசியிலே வீட்டின் விலையை விட இரண்டு மடங்காக வரும் போல இருக்கு. அந்த நிறுவன முதலாளி வட்டியைக் குறைக்க முடியாது என்கிறார். அதனால் மண்டையைப் போட்டுக் குடைஞ்சு கொண்டிருக்கிறோம்.

"உங்களைப் பார்த்துச் சிரிக்கிறதா... அழுறதா என்று தெரியவில்லை... ஏதோ இரண்டு பேரும் சம்பாதிக்கிறோம். கொஞ்சம் நிம்மதியா சந்தோஷமா இருக்கிறோம். இது போதாதா? முதலில் மூன்று லட்சம் முற்பணமா கேட்கிறானே, அதுக்கு என்ன செய்யப் போறனோ? நாம் யாரிட்ட கேட்க முடியும்? நமது வீட்டில் இருக்கின்ற நகைகளெல்லாம் சேர்த்தால் கூட ஒன்றரை இட்சத்துக்கு மேல் சேராது"

இதுக்கு மேலே அம்மாவை பேசவிடாத சாமிநாதன் "நான் என்னமோ... எப்படியோ... பணத்தை திரட்டி விடுவேன்... அதுக்கெல்லாம் எனக்கு நிறைய நண்பர்கள் இருக்கிறார்கள்"

"சரி இருக்கட்டும்... மாசாமாசம் பதினைந்தாயிரம் கட்ட வேண்டுமே. அதுக்கு என்ன செய்வோம்?"

"நமக்குத்தான் முற்பணம் கொடுத்த உடனேயே வீடு கொடுக்கிறான். அதை வாடகைக்கு விட்டா மாதம் ஐயாயிரம் வருமே..."

"சரி... மிகுதி பத்தாயிரம்?" விடவில்லை சிவகாமி.

"அது... அது... எப்படியாவது கட்டத்தான் வேண்டும்"

"உங்கள் இரண்டு பெயருடைய சம்பளமே மொத்தம் பதினான்காயிரத்தை தாண்டாது. அதில பத்தாயிரத்தைக் கொடுத்திட்டால் மிகுதி நாலாயிரம். அதுல வாடகைப் பணம் இரண்டாயிரம் போயிட்டால் மிகுதி இரண்டாயிரம் தான் மிஞ்சும்.. அதில எப்படி நாம் வாழ முடியும். அதுவும் இப்ப இருக்கிற விலைவாசியில..."

அம்மாவுக்கு இவ்வளவு கணக்கெல்லாம் தெரிகிறதா? என்று ஆச்சரியத்தில் அசந்து போனான் சாமிநாதன். தொடர்ந்தாள் சிவகாமி.

"நமக்குத்தான் ஏற்கனவே வீடு இருக்கேடா..."

"ஏனம்மா... விளையாடுறியா... அதைத்தான் விற்று விட்டடோமே..."

"அதில்லை..."

"இப்ப நாம் இருக்கிற வீட்டை சொல்றியா...? இது வாடகை வீடு தானே..."

"அதில்லேடா... ஆண்டவன் கொடுத்த வீடு..."

'மஞ்சுவும் இந்த கிழவிக்கு ஏதோ ஆகி விட்டது' என்றுதன்மனதுள்புலம்பிக்கொண்டாள். யாரும் பதில் பேசாமலிருக்கவே "உன் உடம்பைச் சொல்றேண்டா. நமது உடம்பே நமக்கு வீடு மாதிரித்தான். நமது ஆன்மா எப்போதும் சந்தோஷமாக இருக்க வேண்டும் என்று தான் உடம்பு என்கிற வீட்டை ஆண்டவன் அந்த ஆன்மாவுக்கு கொடுத்திருக்கிறான். எவ்வளவு வருடத்துக்கு நீ உடம்பை நல்ல ஆரோக்கியத்தோட பாதுகாப்பாக வைச்சிருக்கிறாயோ... அந்த அளவுக்கு ஆன்மா சந்தோஷமாக குடியிருக்கும். அதை விட்டு விட்டு உன் சக்திக்கு மீறிய காரியங்களில் நீ இறங்கி உன்னோட கண்ட அபிலாஷைகளுக்கும் நீ உன் உடம்பை ஆட்டி வைச்சா நாளுக்கு நாள் உன் உடம்பு கெட்டுப் போக ஆரம்பிச்சு விடும். பின்னால் அதை சரிப்படுத்துவதற்கு வைத்தியருக்கு ஆயிரக் கணக்கில் செலவு செய்ய வேண்டியிருக்கும். உன் மனசும் வேதனைப்படும்... இதெல்லாம் நமக்குத் தேவையா...?

ஒரு மனுஷன் எந்த வீட்டில வாழ்கிறான் என்பதுமுக்கியமில்லை. அவன்எப்படிவாழ்கிறான் என்பது தான் முக்கியம்... நானும் பார்த்துக் கொண்டே தான் வாறன். வர... வர... நேரங்கெட்ட நேரத்தில வீட்டுக்கு வாறாய்... சரியாகவும் சாப்பிட மாட்டேன் என்கிறான்.... நாளுக்கு நாள் உடம்பும் மெலிஞ்சு கொண்டு வாறாய்"

"போதும்மா... உன் அறிவுரை. வாழ்க்கை என்றால் இப்படியெல்லாம் கஸ்ரப்படத் தானே வேண்டும்"

"போடா மடையா... 'சாந்தமு லேகா... சௌக்யமு லேது' தெரியுமா உனக்கு?"

பதிலேதும் பேசாமல் . மஞ்சுவும் சுவாமிநாதனும் அறைக்குள் போய் விட்டார்கள்.

மறுநாள் காலை.

வழக்கம் போல், பேரன் கண்ணனுக்கு சாப்பாட்டுப் பெட்டியில் தயிர்சாதம், ஊறுகாய், வடை எல்லாம் எடுத்து வைத்துக் கொண்டிருந்தாள் சிவகாமி. மஞ்சுவும் அப்போது சந்தைக்குச் சென்றிருந்தாள்.

"என்ன பாட்டி... எல்லாம் சரியா?.:. நான் கல்லூரிக்குச் செல்ல ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறேன்" கண்ணன் அருகில் வந்தான்.

சாப்பாட்டுப் பெட்டியை வாங்கிய கையோடு வேகமாகக் கிளம்பிய கண்ணனை "டேய் கண்ணா... கொஞ்சம் எனக்காக ஒரு நிமிடம் ஒதுக்கு... நான் உன்னிடம் ஒன்று சொல்ல வேண்டும்"

"என்ன... என்ன... சொல்லு..."

நீ இன்னும் ஒரு வருடத்திலே கணனிப் பொறியியலர்ளர் ஆகிவிடுவாய். அதுக்குப் பிறகு நீ அமெரிக்கா அல்லது ஆஸ்திரேலியா என்று எங்கேயாவது வெளிநாடு போய் மாதம் இ லட்சக்கணக்கில் சம்பாதிக்க வேண்டும்...

"சரி... எதுக்கு இதெல்லாம் இப்ப சொல்கிறாய்?"

உன் அப்பா தனக்கு ஒரு சொந்த வீடு இருக்க வேண்டும் என்று ஆசைப்படுகின்றார். அந்தக் காலத்தில் நமது வீடு பெரிய வீடு. அந்த சொந்த வீட்டில் சொகுசா... செல்லமாக வளர்ந்தவன். இப்ப குடும்ப நிலை மாறிப் போய் இந்த வாடகை வீட்டில் இருந்துகொண்டிருக்கிறோம். அவனோட நண்பர்களெல்லாம் வீடெல்லாம் கட்டி கிரகப் பிரவேசத்துக்கு அழைக்கின்ற போதெல்லாம் உன் அப்பா கூனிக் குறுகிப் போய் விடுகிறான்.. இனிமேலும் இந்த வயசில அவனால ஓடி ஆடி மாதம் இலட்சக் கணக்கில் சம்பாதிக்க முடியுமா என்று எனக்குத் தெரியவில்லை. இனிமேல் புவனா கல்யாணத்துக்கு அவன் ஏதாவது சேமிச்சு ஆக வேண்டும். கண்ணனின் முகம் பரிதாபமாக மாறிக்கொண்டிருந்தது.

"உனக்கும் நாளைக்கு சம்பந்தம் பண்ணப் போறவங்கள் மாப்பிள்ளைக் குச் சொந்த வீடு இருக்கா என்று கேட்பாங்கள். இப்பெல்லாம் சொந்த வீடு இருந்தா தான், கௌரவம். மாதா மாதம் வாடகை கொடுக்கிற கவலை எல்லாம் இருக் காது... நீ சின்ன வயசு. அதான் இப்பவே சொல்கிறேன். பின்னால் நீ எப்படியாவது சம்பாதிச்சு அப்பாவுக்கு ஒரு வீடு வாங்கிக் கொடுத்திடு. பேராண்டி நீ நல்லாயிருப்பாயடா... எனக்கும் எழுபத்தைஞ்சு வயசாச்சு. அந்த வீடெல்லாம் நான் பார்க்கக் கொடுத்து வைச்சிருக்கோ என்னவோ... சரி... நீ போயிட்டு வா..."

என்றவள் முந்தானையால் கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள். குளித்து விட்டு தலையைத் துவட்டிக் கொண்டே ஜன்னலுக்குப் பின்னால் இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த சாமிநாதன் கண்களும் கண்ணீரில் குளிக்க ஆரம்பித்து விட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏட்டுச் சுரக்காய்.....

( 09 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அபாயத்திலிருந்து மீட்டெடுக்கும் வழிவகைகளை உரியவர்கள் கண்டறிய வேண்டும். மக்களின் கடந்த கால அனுபவங்களையும், ஆலோசனை களையும் கேட்டு அறிவதன் மூலம் உருப்படியான திட்டங்களை உருவாக்கிக் கொள்ள முடியும்.

வெள்ளம் வந்த பின்னரே அணை கட்ட வேண்டும் என்று எந்த நியதியும் இல்லை. ஆனால் எங்கள் அதிகாரிகள் பலருக்கும் வெள்ளம் வந்த பின்னர் தான் அணை கட்டுவது பற்றிய சிந்தனைகள் இருக்கின்றன. மழை நின்று போனதும் அதிகாரிகளுக்கு மறதி நோய் வந்து விடுகிறது. பழையபடி அடுத்த மாரி காலத்துக்குத் தான் மீண்டும் வெள்ளம் பற்றிய சிந்தனை அவர்களுக்குள் உற்பத்தியாகும். இதனால்.தான் சபிக்கப்பட்ட பூமி போல தொடர்ச்சியாக ஒரே பகுதிகளே வெள்ளத்தின் கோபத்துக்கு ஆளாகின்றன. இந்தச் சாபத்திற்கு விமோசனம் கொடுக்கும் வல்லமை அதிகாரிகளுக்கும், அரசியல்வாதிகளுக்கும் நிறைவே உண்டு. ஆனால் துரதிர்ஷ்ட வசமாக சாபவிமோசனம் கொடுக்க வேண்டியவர்கள் தொடர் தூக்கத்தில் இருப்பதால் மக்கள் தொடர் துக்கத்தில் தவிக்க வேண்டியிருக்கிறது.

# அம்மா என்னை.....

(18 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வைக்கப்பட்டுள்ளான். மேலும் தாய் சுமித்திரா நீதிமன்ற உத்தரவின்பேரில் விசாரணைகளுக் காக தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளாள்.

பெற்ற மனம் பித்து. பிள்ளை மனம் கல்லு என்று கூறுவார்கள். இன்று அந்த நிலை மாறிவிட்டதே என்று எண்ணத் தோன்றுகின்றது. இவை அனைத்துக்கும் அடிப் படைக் காரணம் வறுமையும், பெற்றோரின் தவறான செயற்பாடுகளுமேயாகும்.

வறுமையால் துவண்டு போகும் சந்தர்ப்பங்களில் மன அழுத்தம் காரணமாக எதைச் செய்யவும் துணிந்து விடுகின்றார்கள். அவ்வாறு தான் இந்த சம்பவத்தையும் நோக்க வேண்டியுள்ளது.

எவ்வாறு இருப்பினும், பெற்ற பிள்ளையை ரயில் முன்னால் தள்ளி கொலை செய்ய தாய் ஒருவர் முயற்சித்துள்ளதை அவ்வளவு இலேசாக எவராலும் மறந்து விடவோ மன்னிக்கவோ முடியாது.

# பிரான்ஸில் பயங்கரம்...

( 03 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கில் குர்து மொழி பேசும் சிறுபான்மையினரின் பிரதேசம் உள்ளது. அதனை PKK-YPG போன்ற குர்திய இயக்கங்கள் தமது கட்டுப்பாட்டில் வைத்துள்ளன.

மத்தியில் உள்ள இஸ்லாமிய தேசம், சுனி - முஸ்லிம் சமூகத்தினரின் தாயகமாக உள்ளது. அதாவது, இஸ்லாமிய தேசத்தினுள் சுன்னி முஸ்லிம்கள் மட்டுமே வாழ முடியும். கிறிஸ்தவர்களை மட்டுமல்ல, ஷியா, அலாவி முஸ்லிம்களை கூட, ஐ.எஸ் அமைப்பு இனச் சுத்திகரிப்பு செய்து விரட்டி விட்டது. ஈராக்கிலும் அதே கதை தான்.

வடக்கில் குர்து மொழி பேசும் சிறுபான்மையினர். தெற்கில் ஷியா முஸ்லிம்கள். மத்தியில் சுனி முஸ்லிம்கள்.

பாரிஸ் நகரில் நடந்த தாக்குதலின் மூலம், ஐ.எஸ் அமைப்பு தனது மேற்குலக எஜமானர்களுக்கு பேருதவி புரிந்துள்ளது. பாரிஸ் தாக்குதல் நடப்பதற்கு, சில தினங்களுக்கு முன்னர், சி.ஐ.ஏ தலைமை நிர்வாகி ஜோன் பேர்னன் பாரிஸ் வந்திருந்தார். அவர் தன்னைப் போன்று, பிரெஞ்சு புலனாய்வுத் துறை தலைமை அதிகாரியைச் சந்தித்துப் பேசி உள்ளார். மொசாட் பிரதிநிதி ஒருவரும் அந்தச் சந்திப்பில் கலந்து கொண்டதாகத் தெரிய வருகின்றது.

சிரியாவின் வரைபடம் இனி ஒருபோதும் முன்னரைப் போல இருக்கப் போவதில்லை... என்று, புலனாய்வுத் துறை தலைவர்களின் உயர்மட்ட சந்திப்பின் போது கூறப்பட்டுள்ளது. தற்போது சிரியாவின் மூன்றில் ஒரு பகுதி மட்டுமே அசாத் அரசின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது. வடக்கில் குர்தியர்கள் ஆட்சி செய்கிறார்கள். நாங்கள் சிரியாவின் மத்திய பகுதியை கைப்பற்ற வேண்டும். என்று தெரிவித்தார்.

அனேகமாக, பிரான்ஸ் நடத்தப் போகும் புதிய போரானது, இஸ்லாமிய தேசத்தை தனி நாடாக்கும் போராக இருக்கலாம். அதற்கு இஸ்லாமிய தேசம் என்ற பெயர் இருக்க வேண்டுமென்றோ, அல்லது அதை ஐ.எஸ் அமைப்புதான் ஆள வேண்டும் என்றோ, எந்தக் கட்டாயமும் இல்லை. மேற்கத்திய வல்லரசுகள் புதிதாக உருவாக்கப் போகும், ஜனநாயக ஐ.எஸ் கட்சி அந்தப் பிரதேசத்தை நிர்வகிக்கலாம். எது எப்படி இருப்பினும், மத்திய கிழக்கின் வரைபடம் மாற்றியமைக்கப் படவுள்ளது என்பது மட்டும் நிச்சயம்.

# மியான்மாரில் ஆட்சி மாற்றம்...

( 07 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தேர்ந்தெடுக்கப்பட்ட அரசை படைத்துறையினரால் கலைக்க முடியும். பர்மாவை சீனாவின் ஆதிக்கத்தில் இருந்து விடுவித்து அமெரிக்காவின் சார்பாக மாற்றும் முயற்சிக்கு பர்மிய அதிபர் தெயின் செயின் இணக் கப் பட்டதுதான் இந்த அமெ ரிக்க பர்மிய ஆட்சியாளர் களுக்கு இடையிலான உறவை உருவாக்கியது.

### ராகினிய மாகாணத்தில் இனச் சுத்திகரிப்பு

பர்மாவின் ராகினி மாகாணத் தில் வாழ்ந்த முசுலிம்களை அங்குள்ள பௌத்தர்கள் அரச படையினரின் உதவியுடன் கொன்று குவித்து வீடுகளைக் கொழுத்தித் தரைமட்டமாக்கி பெரும் இன்ச் சுத்திகரிப்பைச் செய்தனர். பல மனித உரிமை அமைப்புக்கள் இதை ஒரு மானிடத்திற்கு எதிரான ஒரு குற்றமாக கருதுகின்றன. ராகினி மாகாணத்தில் இருக்கும் எரி பொருள் வளமே அங்கு வாழ்ந்த முஸ்லிம்களின் உயிர்களுக்கும் உடமைகளுக்கும் உலை வைத் தது. பன்னாட்டுச் சமூகம் சும்மா பார்த்துக் கொண்டிருக்கிறது. [illegible]ாரில் எண்ணெய் வளம் இருப்பதாக இலங்கை அரசு நம்பியது ஞாபகத்திற்கு வருகிறது. மியான்மாரில் [illegible]வண்டியில் சென்ற [illegible]மியப் பெண் ஓர் 11 [illegible] மீது மோதி [illegible]ல் இருந்த [illegible] உடைத்ததால் இனக்கலவரம் மூண்டது எனச் சொல்லப்படுகிறது.

### கச்சின் மாகாணத்தில் இனக்கொலை

பர்மாவின் கச்சின் மாகாணத்தில் சிறுபான்மைக் கிறிஸ்தவர்கள் பெரும்பான்மை பௌத்தர்களின் அடக்கு முறைக்கு எதிராகப் பிரிவினைப் போரை ஆரம்பித்தனர். பின்னர் போர் நிறுத்தம் செய்து சுயநிர்ணய உரிமை கோரி சமாதானப் பேச்சு வார்த்தையை 1994இல் ஆரம்பித்தனர் (ஈழத் தமிழர்களைப் போலவே). 14 ஆண்டுகள் இழுபட்ட பேச்சு வார்த்தையின் பின்னர் கச்சின் போராளிகளை படைக்கலன் களை ஒப்படைத்து விட்டு பர்மியப் படையினருடன் இணையும் படி வற்புறுத்தினர். பின்னர் பேச்சு வார்த்தை 2011இல் முறிந்து போர் மூண்டது. (ஈழத்தைப் போலவே). போர் முனைக்கு உணவு மற்றும் மருந்துகள் செல்வதை பர்மியப் படைகள் தடுத்தன. (ஈழத்தைப் போலவே). போர் முனையில் அகப்பட்ட மக்களுக்கு உணவு போடச் செல்வதாகப் பொய் சொல்லிக் கொண்டு பர்மிய விமானங்கள் அப்பாவி மக்கள் மீது குண்டுகளை வீசின. போர் நடக்கும் போது அமெரிக்காவும் சீனாவும் தமது கரிசனையைத் தெரிவித்தன. ( ஈழத்தில் அமெரிக்காவும் இந்தியாவும் செய்தது போல்). நோபல் பரிசு பெற்ற ஆங் சான் சூயி அம்மையார் தான் இந்த இனக்கொலையில் தலையிடப்போவதில்லை என்றார். (வாக்கு வேட்டை அரசியல்). 2013 ஜனவரியில் கச்சின் மக்களுக்கு எதிராக விமானத் தாக்குதல் நடத்த வேண்டாம் என்றது ஐக்கிய நாடுகள் சபை. கடுமையான விமானத் தாக்குதலையிட்டு தாம் கவலையடைந்துள்ளதாக தெரிவித்த ஐக்கிய அமெரிக்கா பிரச்சனைக்கு படைத்துறைத் தீர்வு கிடையாது எனவும் கூறியது. ( ஈழத்திலும் இதையே சொன்னார்கள்).

### மனிதக் கடத்தலாகக் காட்ட முயற்சி

மியன்மாரில் இனக்கொலைக் குத் தப்பி ஓடிய ரொஹிங்கியா மக்களின் பிரச்சனையை வெறும் மனிதக் கடத்தல் செய்பவர் களின் பிரச்சனையாகக் காட்ட மேற்க்கத்தைய ஊடகங்கள் முயன்றன. நடுக்கடலில் தத்தளிக்கும் ரொஹிங்கியோ மக்கள் தொடர்பாகச் செய்தி வெளிவிட்ட நியூயோர்க் ரைம்ஸ் தெற்காசியாவில் மனிதக் கடத் தல் பயங்கரம் எனத் தலைப்பிட் டுச் செய்தியை வெளிவிட்டது. பர்மாவில் இடப்பெயர்வுக்கு உள்ளான ரொஹிங்கிய இஸ்லாமியர்கள் மனிதக் கடத்தல்காரர்கள் மலேசியாவில் வேலை வாங்கித் தருவதாகக் கூறி ஏமாற்றுகின்றார்கள் என நியூயோர்க் ரைம்ஸ் கூறுகின்றது. பர்மாவில் இருந்து மட்டுமல்ல பங்களாதேசத்தில் இருந்தும் மக்கள் தப்பி ஓடுகின்றார்கள் என்பது பெரிதுபடுத்தப் படுகின்றது.

பர்மாவுடன் மனித உரிமைப் பிரச்சனையை எழுப்பினால் அது மீண்டும் சீனா பக்கம் சார்ந்து விடும் என ஐக்கிய அமெரிக்கா அஞ்சியது. வட கொரியாவுடன் மனிதப் பிரச்சனையை எழுப்பிய படியால் அது அமெரிக்காவின் மோசமான எதிரியாக மாறியது. அது போல் பர்மாவும் மாறக் கூடாது என அமெரிக்காவின் வெளியுறவுக் கொள்கை வகுப் பாளர்கள் கருதுகின்றார்கள். இதனால் மனித உரிமை மீறிய தெயின் செயினை வைத்துக் கொண்டே அவரின் எதிர்ப் பின்றி மியன்மாரில் ஆட்சி மாற்றம் செய்யப்பட்டது. சீனாவுடன் ஆறாயிரம் மைல்கள் எல்லையைக் கொண்ட மியன்மாரில் சீன ஆதிக்கத்தை இல்லாமற் செய்வது இலகுவான செயல் அல்ல. மியன்மார் 1948 ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்ற தில் இருந்தே மியன்மாரின் Wa எனவும் Kachin எனவும் அழைக்கப்படும் ஈர் இனக்குழு மங்களுடன் சீனா நெருங்கிய உறவைப் பேணிவருகின்றது. சீனா நீண்ட கால அடிப்படை யில் திட்டமிட்டு செயற்படு வதில் தனது திறமையை பல துறைகளில் நிரூபித்துள்ளது. இலங்கையிலும் மியன்மாரிலும் அதன் நீண்ட காலத் திட்டம் எப்படி இருக்கப் போகின்றது என்பதைப் பார்க்க இன்னும் மூன்று முதல் ஐந்து ஆண்டுகள் எடுக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு - 6, வெள்ளவத்தை, பெரகும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லான்ட் மார்க் என்டர் பிரைஸ் ஸ்தாபனத்தால், 2015 நவம்பர் 18ஆம் திகதி வெளியிடப்பட்டது.